மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 6
குவிப்பு - 06
பக்கங்கள் - 12
விலை ரூபா 12.00
ஜூன், 2003

THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377

## அன்னை திரேசாவுக்கு முத்திப்பேறு பட்டம்

## வாழும் புனிதை வரலாறு படைக்கிறார்!



- வாழும் புனிதை என வர்ணிக்கப்பட்ட அன்னை திரேசாவுக்கு முத்திப்பேறு பட்டம் வழங்குவது குறித்து உலகெங்கும் மகிழ்ச்சி
- இத்திரு நிகழ்வில் பங்கேற்க உலகெங்கும் இருந்து இப்போதே மக்கள் பெயர்களைப் பதிவு செய்ய ஆரம்பித்துள்ளனர்.

ஏழைகளின் காவலரான அன்னை திரேசா அவர்கள் ஒக்ரோபர் 9ந் திகதி முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்பட உள்ளார். இச்சடங்கு இடம்பெற இன்னும் 5 மாதங்கள் உள்ள நிலையில் உலகெங்கும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வத்திக்கான் பேதுருவானவர் சதுக்கத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் பங்கெடுக்க தமது பெயர்களைப் பதிவு செய்ய ஆரம்பித்துள்ளனர். திருத்தந்தையின் பாப்பிறைப் பதவியின் 25 ஆவது யூபிலி விழாவும் அன்னையின் முத்திப்பேறு பட்ட விழாவும் ஒரே நாளில் இடம்பெறும்.

## பாப்பரசர் பணியில் 25 ஆண்டுகள் நிறைவு

## சாதனை படைக்கும் சரித்திர நாயகர்!



- அதிக ஆண்டுகள் திருத்தந்தையாக இருந்தவர்கள் வரிசையில் 2ம் அருள் சின்னப்பர் 4வது இடத்தில்.
- இதுவரை பூமியின் சுற்றளவைப் போன்று 29 மடங்கு தூரம் திருத்தந்தை பயணம் செய்திருக்கிறார்.
- தனது 100வது வெளிநாட்டுப் பயணத்தை திருத்தந்தை அண்மையில் முடித்துள்ளார்.

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இவ்வாண்டு ஒக்ரோபர் 9ந் திகதி பாப்பரசர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்றார். அன்றைய தினம் அவர் அன்னை திரேசாவை முத்திப்பேறுபட்ட நிலைக்கு உயர்த்தவுள்ளார். இவ்வாண்டின் இம்முக்கிய நிகழ்வுகளைக் கொண்டாட வத்திக்கான் இப்போதே பரபரப்பாகி வருகிறது. இதேவேளை பாப்பரசரின் பல்வேறு மட்டத்திலான சாதனைகளை வத்திக்கான் அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# தமிழர் ஒரு தேசிய இனம்!

## இந்த உண்மையின் அடிப்படையில் சிந்திக்கும் இளைஞர்கள் தேவை

### மடுவில் இடம்பெற்ற தேசிய கத்தோலிக்க இளைஞர் மாநாட்டில் மன்னார் ஆயர்

இலங்கை நாடு சிங்கள பௌத்த நாடு அல்ல. இந்த நாடு பல்லின, மொழி, கலாச்சாரத்தைக் கொண்ட ஒரு நாடு. ஆகவே இங்குள்ள எல்லா மக்களுக்கும் ஒருவர் ஒருவர்மீது நல்லெண்ணம் தேவை. இந்த நாட்டிலே தேசிய இனங்கள் இரண்டு உண்டு. சிங்கள மக்கள் ஒரு மதத்தையும், கலாச்சாரத்தையும் கொண்டு காலாகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அதேபோல் தமிழ் மக்களும் தமக்கென மொழி, கலாச்சாரம், தாயகப் பூமி ஆகியவற்றைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஆகவே தமிழ் மக்கள்



சிங்கள மக்களைப் போன்றே இந்நாட்டின் இன்னுமொரு தேசிய இனமாக உள்ளனர். தமிழர்கள் சிறுபான்மையினர் அல்ல. அவர்கள் இந்நாட்டின் வரலாற்றில் தமக்கென அரசுகளை ஏற்படுத்தி வாழ்ந்தவர்கள். ஆகவே இந்த உண்மையை சிந்திக்கும் இளைஞர்கள் இன்று இலங்கைக்கு தேவை. இவ்வாறு மடுத்திருப்பதியில் நடைபெற்ற தேசிய கத்தோலிக்க இளைஞர் மாநாட்டில் உரையாற்றிய மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கூறுகையில், (தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பாதம் கழுவும் பாப்பரசர்



கடந்த பெரிய வியாழன் அன்று பாதம் கழுவும் சடங்கில் குருக்களின் கால்களை திருத்தந்தை கழுவுகிறார்.

### திருத்தந்தையிடம் பாவசங்கீர்த்தனம் செய்ய பலர் முண்டியடிப்பு

கடந்த பெரிய வெள்ளியன்று வழமைபோல திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் பாவசங்கீர்த்தன தொட்டியில் அமர்ந்தபோது நூற்றுக்கணக்கான மக்கள் அவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்ய முண்டியடித்தனர். ஆனால் பத்துப் பேருக்கு மட்டுமே அவர் பாவசங்கீர்த்தனம் கொடுத்தார். இந்த பத்துப் பேரில் இத்தாலி, ஆங்கிலம், பிரெஞ்சு, போலந்து, உக்ரேனியன் போர்த்துக்கல் மொழி பேசுவோர் இருந்தபோதும் திருத்தந்தை அவரவர் மொழியிலேயே ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றினார்.

### புதிய குருக்களுக்கான நியமனங்கள்

இவ்வாண்டு மன்னார் மறைமாவட்டத்தில் புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட புதிய குருக்களுக்கான பணித் தளங்கள் வருமாறு:

அருட்பணியாளர்கள்

1. அ. ஜெயசீலன் - உதவிப்பங்குத் தந்தை -பேராலயம்
2. செ. அன்ரன் - உதவிப்பங்குத் தந்தை - அடம்பன
3. பிரான்சிஸ் மரி டிக்கோல் உதவிப்பங்குத்தந்தை- பேசாலை
4. ச. சத்தியறாஜ் - உதவிப்பங்குத் தந்தை - வவுனியா
5. சுரேந்திரன் றெவல் - உதவிப்பரிபாலகர் - மடு

**எதிர்பாருங்கள்!**

அடுத்த மாத (ஜுலை) மன்னாவில் மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான புதிய பணித்தளங்கள் பற்றிய விபரங்களை எதிர்பாருங்கள்!

### திருமலை மட்டுநகர் ஆயர்

## ஆயர் பணியில்

### 20 ஆண்டுகளை நிறைவு செய்கிறார்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆயர் பணியில் 20 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இவர் 1983ம் வருடம் வைகாசி 7ம் திகதி ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டார். நவீன உலக வளர்ச்சியின் தேவைகளுக்கேற்ப தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மறைமாவட்ட விசுவாசிகளை பங்கேற்கும் திருச்சபையாக மாற்றியமைத்து வழி நடத்திவரும் ஆயர் அவர்கள், தமது மறைமாவட்டத்தில் சிறந்த ஆயனாக பல வருடங்கள் வழிகாட்ட வேண்டுமென மன்னார் மறைமாட்ட இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

## யாழ். அமைதிக்கான நிகழ்வுகளில் மன்னார் சிறுவர்கள்




கடந்த மே மாதம் 14, 15, 16ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத்தினால் நடாத்தப்பட்ட அமைதிக்கான நிகழ்வுகளில் பங்கேற்கச் சென்றிருந்த மன்னார்க் கலைஞர்களும் சிறுவர்களும!

"ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் பூவுலகம் மகிழ்வதாக" (தி.பா 97 : 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

# இறை அழைப்பை இனம் காண்போம்

பணியில்லா வாழ்வு கனியில்லா மரம் போன்றது. ஆதியிலிருந்து இந்தத் தேதிவரை ஆண்டவரும் அவருடைய அடியார்களும் பணிசெய்வதையே பலமாகவும் - பாலமாகவும் - வரமாகவும் வழியாகவும் கருதி வந்துள்ளனர். இதை இயேசு நன்கு உணர்ந்திருந்தார். தாம் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் ஓய்வின்றி உழைத்தார். அதையே தம் சீடர்களுக்கும் கற்றுக்கொடுத்தார். பணிவிடை பெறவல்ல பணிவிடை புரியவே வந்தேன் என்று வெளிப்படையாகவே இயேசு சொன்னார்.

### உலகைத் துறப்பது ஏன்?

"ரபி நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்" (மாற் 9:5). இறைவனோடு கொண்டுள்ள உறவிலே பிறக்கின்ற அமைதியும் ஆறுதலும் அவற்றை என்றுமே உரிமையாக்கிக் கொள்ளும் ஆவலை தட்டியெழுப்புகின்றன. இத்தகைய ஆவலால் இன்பமுற்று திருத்தூதர் பேதுரு பாடிய ஆனந்த கானம்தான் இது. எங்கு இயேசு தங்குகிறாரோ அங்கே அவரோடு தங்குவதே சீடர்கள் மூவரதும் சித்தமாக இருந்தது. "கூடாரம் மூன்றினை அமைத்துவிடு உனது ஏக்கம் நிறைவு பெறட்டும்" என இயேசு கூறவில்லை. மாறாக இயேசு அவர்களை மலையிலிருந்து கீழே அழைத்து வருகின்றார். மக்களை சந்திக்கச் செய்கின்றார். இறைவனோடு கொள்ளுகின்ற உறவு மக்களை மறந்த தன்னலத்தை வளர்க்கக் கூடாது. உலகத்தை விட்டு ஓடுகின்ற ஓட்டம் சில வேளைகளில் இறைவனை விட்டே ஓடுகின்ற ஓட்டமாகவும் இருக்கலாம். ஏனெனில் இறைவன் உலகில் இருக்கின்றார். ஒரு சீடன் குருவைப் பார்த்துக் கேட்டான். "போதிப்பதற்கும் போதனையின் படி வாழ்வதற்கும் உள்ள வித்தியாசம் என்ன" என்று. குரு சொன்னார் "போதிப்பவர் ஒளியைக் கொண்டு வழிகாட்டுபவர். போதனையின்படி வாழ்பவர் ஒளியாக இருப்பவர்." என்று

### குடும்பமே ஆரம்பக் குருமடம்

குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை. ஆன்மீக ஆழம் நிறைந்த - விசுவாச வாழ்வை வாழுகின்ற குடும்பங்களிலிருந்துதான் இறை அழைத்தல்கள் உருவாக முடியும். குடும்பங்களே சிறந்த அழைத்தலுக்கான விளைநிலமாக இருக்கமுடியும். இன்று தொழிநுட்பம் விரைந்து வளர்ந்து வருகிறது. நாகரீக நடைமுறைகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே போகின்றது. பொழுது போக்குச் சாதனங்கள் ஆபாசத்தையும் அசிங்கங்களையும் கக்கிக்கொண்டிருக்கின்றன. போதைப் பொருள் பாவனை இளையோரைக் கவர்ந்திழுக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் இறையழைத்தலைப் பற்றிச் சிந்திப்பது சில வேளை வேடிக்கையாக விநோதமாக இருக்கலாம்.

### ஐரோப்பாவில் அருகிவரும் அழைத்தல்கள்

ஐரோப்பிய நாடுகளில் இன்று குடும்பவாழ்வு குலைந்து வருகின்றது. இதனால் குடும்பங்களிலிருந்து வரவேண்டிய அழைத்தல்களும் அருகிவருகின்றன. பல ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் அழைத்தல்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் குறைந்து விட்டது. குருமடங்களும் சந்நியாச இல்லங்களும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. மேலை நாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு வரும் குருக்கள் துறவிகள் நம் நாட்டு சிறிய பெரிய குருமடங்களில் மாணவர்கள் நிரம்பி வழிவதைக்கண்டு ஆச்சரியத்தால் கண்களை அகல விரிக்கின்றனர்.

### பங்குத் தந்தையரின் பங்களிப்பு

பங்கு மட்டத்தில் இளைய உள்ளங்களில் உறைந்திருக்கும் இறை அழைத்தல்களை இனம்காணும் பாரிய பணி பங்குத்தந்தையருக்கே உண்டு. கிறிஸ்தவ விசுவாசம் மிக்க குடும்பப் பின்னணி - கல்வி கட்டுப்பாடான தூய வாழ்வு போன்ற நல்ல விழுமியங்களைக் கொண்ட இளம் உள்ளங்களில் அழைத்தலின் விதையை விதைக்கும் - வளர்க்கும் கடமை பங்குத் தந்தைக்கே உரியது. அனைத்திற்கும் மேலாக தனது முன்மாதிரிகையான வாழ்வினால் இளம் உள்ளங்கள் இறை அழைத்தலின்பால் ஆர்வத்தையையும் ஆசையையும் வளர்க்கும் வண்ணம் பங்குத் தந்தை செயலாற்ற வேண்டும்.

### அழைப்பை இனம்காண ஆதரவு தேவை

சிறுவயது முதல் அடிமனதில் வேர்பாய்ந்திருக்கும் அழைத்தலின் விதையை இனம்கண்டு வளர்த்தெடுக்க உரிய ஊக்குவிப்பு தேவை. தேவ அழைத்தல் ஒன்று கூடல்கள் - பயிற்சிப்பாசறைகள் - கருத்தரங்குகள் - கண்காட்சிகள் - படங்கள் - நாடகங்கள் - தெருக்கூத்துக்கள் வழியாக அழைப்பின் குரலை இளையோர் இனம்காண துணைபுரியலாம். ஊடகங்களில் நிகழ்ச்சிகளையும் - ஆக்கங்களையும் வெளியிட்டு அழைப்பின் ஆர்வத்தைத் தூண்டலாம். இளையோரில் உள்ளத்தில் கேட்கும் அழைப்பின் குரலை அவர்கள் இனம்காண ஆதரவு கொடுப்போமா?

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும் வரை
அன்புடன் - அருட்பணியாளர் நேசன்
பதிப்பாசிரியர்



# வாசகர் எண்ணங்கள்

### மன்னாவின் சாதனைப் பயணம்

அறிவைப் புகட்டும் மன்னா
ஏழைகளுக்கு உதவும் மன்னா
குழந்தைகளின் அறிவுக்கு உதவிக்கரம் மன்னா
மனதிற்கு அமைதி தரும் மன்னா
முதியவர்களை இறைவழி நடத்தும் மன்னா
மனிதருக்கு ஆற்றல் அளிக்கும் மன்னா
பாவக்குழியில் விழுந்தோருக்கு உதவிக்கரம் மன்னா
எட்டாத தூரத்திலும் பறந்து செல்லும் மன்னா
பாவக்கறைகளைப் போக்கியதும் மன்னா
பேயை ஓட்டுவதும் மன்னா
அண்ணாவியை அடக்குவதும் மன்னா
சாராயத்தை அகற்றியதும் மன்னா
ஆபாசப் படங்களை ஒடுக்கியதும் மன்னா
சண்டைகளை அடக்கியதும் மன்னா
குடும்பங்களை சமாதானம் ஆக்கியதும் மன்னா
கள்ளுக் கடையைத் தூரத்தே துரத்தியதும் மன்னா
நாட்டிற்கு சமாதானம் அளித்ததும் மன்னா
அன்பியங்களை நடத்தி செல்லுவதும் மன்னா
பாமர மக்களின் நல்லாயன் மன்னா,
மன்னா வாழ்க - வளமுடன் வாழ்க!

பாபு அல்போன்ஸ், தலைமன்னார் கிராமம்.

### எனக்கும் ஓர் இடம் தருவீர்களா?

அன்பன் மன்னாவுக்கு எனது வணக்கம். நீ சுமந்துவரும் ஆக்கங்கள் மிகப் பிரமாதம். அனைவரின் ஆக்கங்களும் மிகவும் நன்றாக உள்ளன. இவை அனைத்தும் என்னையும் ஆக்கம் எழுத தூண்டியுள்ளது. எனவே எனது ஆக்கத்தையும் மன்னாவில் பதிக்க ஓர் இடம் தருவீர்களா?

அ. ஜஸ்ரின் வாஸ், வலயக்கல்வி அலுவலகம், மடு



**பதிப்பாசிரியர் குறிப்பு**

நிச்சயமாக இடம் உண்டு ஜஸ்ரின். ஆனால் உங்களுக்கும் ஏனைய எழுத்தாள நண்பர்களுக்கும் ஒரு விசயத்தை சொல்லி வைக்க வேண்டும். பல எழுத்தாளர்களுக்கு பொறுமையே இல்லை. சிலர் ஒரு ஆக்கத்தை எழுதி அனுப்பிவிட்டு அடுத்த மாதமே அது பிரசுரமாக வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அப்படி இல்லை என்றால் குறைப்படுகின்றார்கள். ஆக்கங்களை தொடர்ந்து எழுதுங்கள். தரமான ஆக்கமாய் இருந்தால் அது எப்போதோ ஒரு நாள் வெளிவரும். இன்னுமொரு விடயம். உங்களுக்கு முன்னர் வந்த ஆக்கங்களை வைத்துவிட்டு பின்னர் வந்தவற்றை பிரசுரிப்பதும் நியாமில்லைத்தானே?

### சிறப்பிதழ் சிறப்பாக இருந்தது

உயிர்ப்பு விழா மன்னா சிறப்பிதழ் கிடைத்தது மிக்க மகிழ்ச்சி. புதுப்பொலிவுடன், அரிய பல விடயங்களைத் தாங்கி, அதிக பக்கங்களுடன் வெளிவந்தது பாராட்டத்தக்கது.
உயிர்ப்பு பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்களை வெளியிட்டமைக்கு நன்றிகள் பல. குறுக்கெழுத்துப் போட்டி, அறிவுக்கு விருந்தாகவும், சிந்தனைக்குரியதாகவும், விவிலியத்தை மீளாய்வு செய்யத் தூண்டுபவையாகவும், குறிப்பாக மாணவர்களுக்கு ஒரு தூண்டுதலாகவும் இருப்பதாக அமைந்துள்ளது. தயாரிப்பாளருக்கும் பதிப்பாசிரியருக்கும் என் பாராட்டுக்கள்.
எமது பங்கில் பணிபுரிந்தவர்களை எமக்கு திருமணம் செய்துவைத்த பணியாளர்களை, எமது ஊர்களில் உள்ள கோவில் புனிதர்களின் திருவிழாக்களைச் சிறப்பித்த பணியாளர்களை, எமது தாய், தந்தையர், உறவினர், நண்பர்களின் மரணச்சடங்கு வைபவங்களை நிறைவேற்றியவர்களை வெள்ளிவிழா காணும் அருட் பணியாளர்களை, திரும்பவும் ஒரு முறையல்ல பல முறை நினைவு கூரச்செய்யும் மன்னாவுக்கு மீண்டும் எமது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

*மரிய கார்ஜஸ், பிரான்ஸ்*

### விளக்கம் வேண்டும் சொல்வீர்களா?





கனம் பதிப்பாசிரியருக்கு தாழ்மையுடன் கேட்டுக்கொள்வது, நீங்கள் விவிலிய குறுக்கெழுத்து போட்டிக்கான விடைகளோடு சிறு ஆக்கங்களையும் சேர்த்துச் ஒன்றாக அனுப்பினால் ஆக்கத்தை விட்டு விட்டு போட்டி விடையை மாத்திரமா சேர்த்து கொள்வீர்கள்? அப்போ ஆக்கங்களை சேர்க்க மாட்டீர்களா? நான் ஒவ்வொரு முறையும் போட்டி முடிவுடன் சிறு ஆக்கமும் எழுதி அனுப்புவது வழக்கம். ஆனால் மன்னாவில் அவ்வாறான ஆக்கம் ஒன்றையும் காணவில்லையே. ஏன் நான் எழுதி அனுப்புவது தரமில்லாமல் உள்ளதா? அப்படி என்றால் பரவாயில்லை. முதல் தொடர்ந்து எனது ஆக்கம் வந்து கொண்டிருந்தது மகிழ்ந்தேன். தற்போது திடீர் என வராமையால் அதிர்ச்சியாகவும், கவலையாகவும் உள்ளது. தற்போது போட்டி முடிவையும் ஆக்கத்தையும் வேறு வேறாக அனுப்பியுள்ளேன். இந்த ஆக்கமாவது சேர்த்து கொள்ளப்படுகின்றதா என ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

*மன்னா வாசகி, ஜெஸ்மின் சரோன்.*

**பதிப்பாசிரியர் குறிப்பு**

சரோன், தரமான எந்த ஆக்கத்தையும் நாம் தள்ளி விடுவதில்லை. ஒரு கவருக்குள் (என்வலப்புக்குள்) எத்தனை ஆக்கங்களையும் வைத்து அனுப்பலாம். ஆனால் அவை ஒவ்வொன்றையும் தனித் தனித் தாளில் எழுத வேண்டும். இது மிகவும் முக்கியம். சிலர் ஒரே தாளில் பெரியப்பா கேள்வி பதில், நகைச் சுவை மற்றும் பல ஆக்கங்களை எழுதி அனுப்புகிறார்கள். இதனால் நாம் அந்த தாளை எந்த அம்சத்தோடு சேர்த்து வைப்பது எனத் தெரியாது திண்டாடுகின்றோம். எனவே ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனி தாளில் எழுதுவதே நல்லது. எமக்கும் சிரமம் இருக்காது. உங்கள் ஆக்கங்கள் காலக்கிரமத்தில் பிரசுரமாகும். கவலையை விடுங்கள்.

## உண்மையின் எண்ணங்கள்
## உங்கள் எண்ண அலைகளுக்கு எழுத்துருக் கொடுங்கள்!

வாசகர்களே எழுத்தாளர்களே கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றிய உங்கள் எண்ணங்களை மற்றவர்ளோடும் பகிர்ந்துகொள்ளுங்கள். இந்த எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதென்பது தனிநபரையோ அல்லது ஒரு அமைப்பையோ குற்றம் சாட்டுவதற்காக அல்ல. மாறாக நம்மையே நாம் சுய மதிப்பீடு செய்து தவறுகளைக் களைந்து இறையரசைக் கட்டும் பணியில் நாம் முன்னேறிச் செல்வதற்காகவே. எனவே உண்மையின் எண்ணங்கள் என்ற தலைப்பில் எழுதுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.




### புனிதர் பொன்மொழி

"ஒவ்வொரு நாளும் தாழ்ச்சி முயற்சி ஒன்றாவது செய் அது இல்லாத நாளை வீணானதாகக் கருது."

புனித மதலேன் சோபி (1779 - 1865)

### புனிதர் பொன்மொழி

"ஒருவன் கடவுளோடு சமாதானமாய் வாழாவிட்டால் அவனது இல்லத்தில் சமாதானம் இருக்க முடியாது".

- முத்திபேறுபெற்ற அன்னமரியா - (1769 - 1837)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்ட

# அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான 5 நாள் வதிவிடப் பயிற்சி

மன்னார் மறைமாவட்ட அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான ஐந்து நாள் வதிவிடப் பயிற்சி 14.05.2003 - 19.05.2003 வரை அன்பியப் பணியகத்தில் நடைபெற்றது. 165 அன்பியப் பணியாளர்கள் இப்பயிற்சிப் பாசறையிலே கலந்துகொண்டனர். இவ்வாண்டின் மறைமாவட்ட அருட்பணித்திட்டமிடல் மகாநாட்டில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட மையப்பொருளான, குடும்பம், இறைவார்த்தை, இளைஞர்கள், நற்கருணைப் பணியாளர்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு ஊக்குவிப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. மன்னார் மறைமாவட்ட அன்பிய மத்திய குழு உறுப்பினர்கள் இந்தப் பயிற்சியினை சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தனர்.



அருட்பணியாளர் றொகான், திரு. நிமால

14.05.2003 அன்று மாலை 6.00 மணிக்கு தொடக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. மன்னார் மறைமாவட்ட மேலதிக முதன்மைக்குரு அருட்பணி யோ. பெ. தேவராஜா அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்து பயிற்சி நெறியை தொடங்கி வைத்தார். தூய ஆவியினுடைய பாடலோடு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் திருத்தந்தையின் கொடியினை அருட்பணி யோ. பெ. தேவராஜா அடிகளாரும், இலங்கைத் திருச்சபையின் கொடியினை மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி கி. அ. டலிமா அவர்களும், மறைமாவட்ட அன்பியக் கொடியினை மத்திய குழு உறுப்பினர் திருமதி ரமணி மரியநாயகம் அவர்களும் ஏற்றிவைத்தனர். பின்னர் அன்பிய எழுச்சிப் பாடலுடன் பயிற்சி மண்டபத்தை நோக்கி அனைவரும் அணிவகுத்துச் சென்றனர்.



தேவா அடிகளார்



டலிமா அடிகளார்

ஆசியுரை வழங்கிய அருட்தந்தை தேவராஜா அடிகளார் இந்த மறைமாவட்டத்தின் அன்பிய வளர்ச்சி கண்டு தான் பெருமகிழ்வு அடைவதாகவும், இந்த உன்னதமான ஒரு வாழ்க்கை முறைக்காக உழைக்கின்ற இறைமக்கள், குருக்கள் , துறவிகள் அனைவரையும் தான் வாழ்த்துவதாகவும் கூறினார். ஆயரின் தீர்க்கதரிசனப் பார்வையில் எழுந்த இந்தப் புனித முயற்சி நமது மறைமாவட்டத்திற்கு உண்மையிலேயே இறைவனின் ஆசீர்வாதமாகும் என்றும் அவர் கூறினார். இந்நிகழ்வில் மறைமாவட்ட அன்பியச் செயலர் திரு. ஜேக்கப் பெஞ்சமின் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.



திரு.பெஞ்சமின்

தொடர்ந்து நற்கருணை வழிபாட்டுத் தியானத்தோடு தொடர் பயிற்சி ஆரம்பமாகியது. திருச்சபை, அழைத்தல் வாழ்வு, நற்கருணை போன்ற விடயங்களில் தேர்ச்சியும், தெளிவும், அனுபவமும், உண்மையான ஈடுபாடும் கிடைக்கக்கூடிய விதமாக இரண்டாம் நாள் பயிற்சிகள் அமைந்திருந்தன. உண்மையிலேயே ஒவ்வொரு ஊக்குவிப்பாளரும் தங்கள் அருட்சாதன அழைத்தல் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கவும், தாங்கள் எப்படி செயல்படுகின்றோம் எப்படி செயல்பட வேண்டும் என்பவைகளை சீர்தூக்கிப் பார்க்கவும் இந்த பயிற்சி பெரும் வாய்ப்பாக அமைந்தது. (தொடர்ச்சி 10ம் பக்கம்)





பயிற்சியில் கலந்துகொண்டோர் ......... பயிற்சியின்போது ........!

# அன்பிய பயிற்சி நெறியின்போது

அன்பிய பயிற்சி நெறியின்போது

# சிதறிய சிந்தனைகள்

## அன்பியம் என்பது ஓர் உயிர்! இந்த உயிர் வளர்க்கப்பட வேண்டுமானால் அன்பு என்னும் சத்துணவு தேவை!

-- மன்னார் ஆயர் --



அன்பியம் என்பது ஓர் உயிர். இந்த உயிர் வளர்க்கப்பட வேண்டுமானால் அன்பு என்னும் சத்துணவு தேவை. நீங்கள் இந்த நாட்களிலே பெற்ற பயிற்சி அன்பியங்களைப் பலப்படுத்துவதாய் அமைய வேண்டும். நற்கருணையை மையப்படுத்தியதாக உங்கள் வாழ்வு அமைய வேண்டும் என மன்னார் ஆயர் அன்பியப் பயிற்சி நெறியின்போது தெரிவித்தார். மக்கள் எங்கு ஒன்று கூடுகிறார்களோ அங்கே பெரிய சாதனை நிகழும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதுபோல கிறிஸ்தவ வாழ்வில ஒற்றுமை இருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்வில் ஒற்றுமை முக்கியமானது. நாற்று மேடையில் பயிர்கள் ஒன்றாக வளர்ந்து பின் பிடுங்கி நடப்பட்டாலும் சிறப்பாகப் பலன் கொடுப்பது போன்று அன்று ஆதிக் கிறீஸ்தவர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் - பின்னர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் கிறீஸ்துவின் சாட்சிகளாய் வாழ்ந்து பலன் கொடுத்தார்கள். மக்கள் ஒருமனப்பட்டு ஒரே மனமும், ஒரே உள்ளமும் கொண்டவர்களாக வாழ்ந்தார்கள். அதனால் ஒற்றுமையில் ஒன்றுபட்டு வளர்ச்சியடைந்தார்கள். இயேசுவில் ஒன்றித்து வாழ்வதுதான் ஒற்றுமையை உருவாக்கும் "நானே திராட்சைக் கொடி நீங்கள் அதன் கிளைகள்" என்று கூறிய இயேசுவோடு நாம் அனைவரும் ஒன்றித்திருக்க வேண்டும். திருச்சபையை வளர்ப்பதற்கு உறுதியாக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். கிளைகள் மரத்தோடு ஒன்றித்து வாழ்ந்தால்தான் சிறநத கனியைக் கொடுக்க முடியும். அன்பு கடவுளிடமிருந்து வருகின்றது. ஆகவே கடவுளோடு இணைந்திருக்கும்பொழுதுதான் நம்மால் அன்பைப் பகிர்ந்து சாட்சிய வாழ்வு வாழமுடியும். அன்பிய மத்திய குழுவினர் போன்று நீங்களும் பங்குத் தந்தையர்களுடன் இணைந்து செயற்படவேண்டும் என ஆயர் மேலும் குறிப்பிட்டார்.

## ஒன்று சேர்ந்து வாழும்போது உயிர்த்த கிறிஸ்து பிரசன்னமாகி இருப்பார்

தேசிய அன்பிய செயலக பயிற்சியாளர் நிமால்



ஒன்றுசேர்ந்து வாழும்போது உயிர்த்த கிறிஸ்து எம்மத்தியிலே பிரசன்னமாக இருப்பார் நாம் அனைவரும் மனமொத்து ஒன்றாக ஆண்டவர் பெயரால் வரும்போது ஆண்டவர் எம்மத்தியில் உள்ளார். அன்பியங்களைக் கட்டி எழுப்புவதற்கு அடித்தளம் இதுவே. இவ்வாறு ஊக்குவிப்பாளர்களுக்கான செய்தியை வழங்கிய அன்பிய தேசிய செயலகத்தைச் சேர்ந்த திரு. நிமால் அவர்கள் குறிப்பிட்டார். இப்பயிற்சி நெறியில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதை சுட்டிக்காட்டி முதன்முதலாக உயிர்த்த கிறிஸ்து பெண்களுக்குத்தான் காட்சி அளித்தார் என்றும், அன்னை மரியாள்கூட மீட்புத் திட்டத்திலே சிறப்பாக பங்கு கொண்டாள் என்றும் கூறி அன்பியத்தின் தலைமைத்துவத்தை பெண்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். இந்தப் பாரிய பொறுப்பிலே ஆண்களும், (பேதுருவும், யோவானும் ஆண்டவருக்காக சேவையாற்றியதுபோல) பெண்களோடு இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்றார்.

மேலும் அவர் தனது உரையில், இலங்கையில் உள்ள மறைமாவட்டங்களில் அன்பிய அனுபவத்தில் மன்னார், குருநாகல், கண்டி, சிலாபம் போன்றவை சற்று ஆழமாக வேரூன்றியவையாக இருக்கின்ற மறைமாவட்டங்களாகும். எனினும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நீங்கள் ஏனைய மறைமாவட்டங்களுக்கெல்லாம் அன்பிய அனுபவத்தை பொறுத்தளவிலே முன்மாதிரியாக இருக்கிறீர்கள். இதையிட்டு நாங்கள் உங்களை வாழ்த்துகின்றோம். அதேபோல் ஏனைய மறைமாவட்டங்களையும் அன்பிய வாழ்வுக்குள்ளே அழைத்துவர நாங்கள் தொடர்ந்தும் முயற்சி செய்துகொண்டே வருகின்றோம். நீங்கள் அனைவரும் இந்த அன்பிய அனுபவத்திலே இன்னும் ஆழமாக வேரூன்றி வளர்ச்சிகாண வேண்டும் என்று ஆசிக்கின்றேன் என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

# பங்குத் தள சங்கதிகள்

## செபமாலைத்தாசர் இல்லத்தின் பத்திமா திருவிழா

வவுனியா மதவுவைத்தகுளம் செபமாலைத்தாசர் சபையினரால் பத்திமா அன்னையின் ஆலயத் திருவிழா 13.05.2003 அன்று ஆலய சுற்றாடலைச் சுற்றி திருச்செபமாலைப் பவனியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 6.00 மணியளவில் கூட்டுத்திருப்பலியும் இடம்பெற்றது. ஆலயத்திருவிழாவிற்கு செபமாலை தாசர் சபையின் மாகாண முதல்வர் ஸ்ரீபன் அடிகளார் வருகை தந்திருந்தார். திருவிழாத் திருப்பலியை கோமரசன் குளப்பங்குத் தந்தை அருள்நாதன் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். பெருந்தொகையான அன்னையின் பக்தர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். வடமாகாண செபமாலைத் தாசர் சபையின் முதல்வர் ஸ்ரீபன் அடிகளார் தனது உரையில் செபமாலைத்தாசர் சபையின் ஆரம்பம் பற்றியும் அவர்களது பணி பற்றியும் சிறப்பாக விளக்கிக் கூறினார்.

கலிஸ்ரா ரவீந்திரன், வவுனியா.

## கீளியன் குடியிருப்பில் மறைமாவட்ட இளைஞர் ஒன்றிய செயற்குழு கூட்டம்

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியக் கூட்டமானது கடந்த 23.05.2003 அன்று மாலை 8.30 மணியளவில் இளைஞர் ஒன்றிய உதவி இயக்குனர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையில் கீளியன் குடியிருப்புப் பங்கில் ஆரம்பமானது. கீளியன் குடியிருப்பு இளைஞர் ஒன்றியப் பொருளாளரினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. ஒவ்வொரு பங்கிலிருந்து வந்தவர்களும் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்துகொண்டார்கள். பின் உதவி இயக்குனர் ஞானப்பிரகாசம் அடிகளாரால் உரை நிகழ்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறப்புரையாக அருட்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளாரால் இளைஞர்களின் பணி பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தொடர்ந்து கீளியன் குடியிருப்பு பங்குத தந்தை மரியதாஸ் அடிகளாரால் தமது பங்கு இளைஞர் ஒன்றிய வளர்ச்சிபற்றி கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து குடும்ப நல அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாரால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது. அதில் இளைஞர்களின் பணி புதுவடிவம் பெறவேண்டும் என்றும் யார் யார் அதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கூறி தனது உரையை நிறைவு செய்தார். இறுதியில் ஆட்காட்டிவெளிப் பங்கைச் சேர்ந்த ஜெ. அஞ்சலா என்பவரினால் நன்றியுரை வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்த கூட்டம் ஆனி மாதம் 8ம் திகதி மடுத்திருப்பதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

## வஞ்சியன்குளத்தில் அன்னையின் திருச்சுரூபப் பவனி

வைகாசி மாதம் அன்னைக்கென ஒதுக்கப்பட்ட மாதம் பங்குகளில் செபமாலை சொல்வது வழக்கம். வஞ்சியன் குளத்தில் ஐந்து வருடதிற்கு ஒருமுறை அன்னையின் திருச்சுரூபம் வீடுகளுக்கு கொண்டு சென்று அங்கு திருச்செபமாலை வழிபாடுகள் மிகவும் பயபக்தியாக இடம்பெறுவதுண்டு. இவ்வருடமும் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

இம்மாதத்தில் எமக்குப் பொறுப்பாக இருக்கும் அருட்தந்தை அருட்பிரகாசத்தினால் எமது கிராமங்களில் செபமாலைப் பவனிகள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக பக்திப் பற்றுதலோடு நடந்தேறியது.

ஜெயந்தன், வஞ்சியன் குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## – மறதி –
## சிறுவர் சிந்தனைக் கதை





பொன்னுத்துரைக்கோ மறதி அதிகம். அவர் வாழும் கிராமத்தில் திருடர்களும் அதிகம். ஒருவாரத்துக்கு முன் அவருடைய மனைவி, பிள்ளைகள் வெளியூர் சென்று விட்டார்கள். ஓர் நாள் இரவு அவர் படுக்கைக்குச் செல்லுமுன் திருடர்களுக்குப் பயந்து தமது வீட்டிலே உள்ள விலைமதிக்கத் தக்க பொருட்களை எடுத்துப் பாதுகாப்பாக ஓர் அறையில் களஞ்சியப்படுத்தி கதவைத் தாழிட்டு திறப்பை ஒளித்து வைத்தார். தனக்குள்ள மறதியை அறிந்து கொண்டவராக தான் திறப்பு வைத்திருந்த இடத்தை ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக சிறிய கடதாசியை எடுத்து இடத்தைக் குறித்து அதனைத் தனது தலையணைக்கு அருகே வைத்து விட்டு அயர்ந்து விட்டார். இவருடைய மறதியை அறிந்து கொண்ட திருடர்களுக்கு அவருடைய செயற்பாடுகளும் சாதகமாக அமைய அவரது வீட்டுக்குள் திருடர்கள் புகுந்தனர். பொன்னுத்துரையின் தலையணைக்கு அருகே இருந்த இடக்குறிப்புக் கடதாசி மூலம் திறப்பு இருந்த இடத்தை அறிந்து அவருடைய பொருட்களைக் கன்னமிட்டுக் கொண்டனர். அதிகாலையில் தூக்கம் கலைந்து எழுந்த பொன்னுத்துரை கதவு திறக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். தலையணைக்கு அருகே தான் வைத்திருந்த குறிப்புக் கடதாசியைத் தேடினார். அதனைக் காணவில்லை. தனது முட்டாள் தனமான செயலை எண்ணி வருத்தப்பட்டார்.

ச. மொறின் டயானா, ஒன்றிய இல்லம், கள்ளியடி.

## புனிதர் என்றால் யார் தெரியுமா? புனிதர் என்றால் யார் தெரியுமா?




இன்பமும் துன்பமும் வாழ்வில் அவர்கள் சந்திப்பவை



தம்மைப்பற்றி நகைக்கவும் அவர்களால் கூடும்



சிறிய விடயங்களிலும் மகிழ்ச்சி காண்பர்



எவருடனும் இலகுவாக ஒன்றிணைந்து கொள்வர்

## சிறுவர் தொடர் கதை

# சிவந்த மணல்

அங்கம் 9

## புனித அருளானந்தர்



33. தம் தாய்நாடு சென்றாலும், அங்கும் அவர் ஒரு தமிழ்ச் சந்நியாசியாகவே இருந்தார். தமிழகத்தில் எப்படி காவி உடை அணிந்து பண்டாரசாமிகள்போல் வாழ்ந்தாரோ அதைப் போலவே மேலைநாட்டு தம் தாய்நாட்டிலும் அதிலும் குறிப்பாக, போர்த்துக்கல் நாட்டு அரசரைக் காணச் சென்றபோதும் அவ்வாறே உடையணிந்து சென்றார். மரக்கறி உணவு மட்டுமே உண்பார். மது அருந்தவில்லை. லிஸ்பன் நகரில் தங்கி இருந்தபோது மலபார் மாநிலம், மதுரை மண்டலம் ஆகிய பகுதிகளில் பணிபுரிய தேர்ந்தெடுத்த குருக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்குப் பணித்தளம் பற்றிய விளக்கம் அளிப்பார். அவர்களுடன் மருத்துவமனையில் சேர்ந்து பணிபுரிவார். சிறுவர்களுக்கு ஞான உபதேசம் கற்பிப்பார். தாழ்ந்த பணிகளையும் தாராள மனத்துடன் செய்வார்.

34. "மனிதன் நினைப்பது ஒன்று, இறைவன் விரும்புவது வேறொன்று" என்பதற்கொப்ப, தம் தாய் நாடான போர்த்துக்கல்லை வந்து அடைந்த நம் புனிதரை, அந்நாட்டு மன்னர் எப்படியாவது தன்னுடன் தங்க வைத்துக்கொள்ள விரும்புகிறார். இக்கருத்தில், மன்னரைவிட அரசிதான் அதிக ஆர்வம் காட்டினார்கள். ஆனால் நம் புனிதர் மறவ நாட்டை மறந்து லிஸ்பன் நகரில் அரசருக்கு ஆலோசகராக இருப்பதை சிறிதும் விரும்பவில்லை. எனவே அரசியின் மனம் மாற செபித்தார் நம் புனிதர். அரசியினுடைய ஆன்ம குருவானவரை அணுகி தனக்காகப் பரிந்து பேசும்படி வேண்டினார். நம் புனிதரை மறவ நாட்டில் இறையரசு பரவ பணிபுரியத் தடுத்து நிறுத்துவது குற்றமாகும், இது அரசியையே சாரும் என்பதையெல்லாம் உணர்ந்த அரசியின் மனம் மாறியது. எனவே அரசரிடம் மன்றாடி நம் புனிதர் மறவ நாட்டுக்கு மீண்டும் திரும்ப அரசியே அனுமதி பெற்றுத் தந்தார்கள். அதைப்போல, நம் புனிதரின் மூத்த சகோதரரும் முதலில் வேதனைப்பட்டாலும், தனது தம்பியின் ஆவல் நிறைவேறுவது குறித்து மகிழ்ச்சி கொண்டு பின் அவரது பணிக்குத் தேவையான பொருட்களையெல்லாம் சேகரித்துக் கொடுத்தார்.

35. நம் புனிதர் உடன் பிறப்பிற்கு எழுதிய மடல் உள்ளத்தைத் தொட்ட உருக்கும் மடலாக அமைந்தது. வான் வீடே எனது வீடு: அங்குதான் என் பயணம் முடிவு பெறும்: அங்குதான் நாம் அனைவரும் பிரிவு என்ற பேரிடிக்கு ஆளாகாது ஒன்றுகூடி இருப்போம், எனக் குறிப்பிட்டு எழுதுகின்றார். இந்த உள்ளத்தை உருக்கும் நம் புனிதரின் மடலானது, தனது சகோதரருக்கு அவர் எழுதிய இறுதி மடலாகவே அமைந்தது. இறைவன் மீதும், இயேசுவின் மீதும், அவரது இறையரசை இம் மறவ நாட்டில் பரப்பிட நம் புனிதர் கொண்ட ஆவல்தான் எத்துணை உயர்ந்தது, சிறந்தது.

36. எனவே 1690ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் நாள் இந்திய மண்ணிற்குப் புறப்பட்ட ஒரு கப்பலில் சில நாட்கள் கழித்து பல இடர்பாடுகளைக் கடந்து நம் புனிதரும் அக்கப்பலில் ஏறிக்கொள்கிறார். அதே ஆண்டு நவம்பர் மாதம் 2ம் நாள் கோவா நகரை அடைந்தார். நம் புனிதரையும், அவருடன் வந்த மற்ற வேத போதகக் குருக்களையும் மக்கள் கூடி மகிழ்வுடன் வரவேற்றனர். புனித சவேரியார்மீது தனிப்பற்று கொண்ட நம் புனிதருக்கு, தனிப்பட்ட முறையில் புனித சவேரியாரின் இறந்தும் அழியா அவரது உடல் காண்பிக்கப்பட்டது. கோவாவில் ஓய்வு எடுத்தபின் மலபார் மாநிலத்திற்குரியவர்கள் அம்பலக்காட்டை அடைந்தனர். பின்பு தோப்பூரை வந்தடைகிறார் நமது புனிதர். இதற்கிடையில் மதுரை மண்டல ஆய்வாளராகவும் நியமனம் பெறுகிறார். 1691ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள், நம் புனிதர், சிலுவை நாயக்கர் அவரது மகன் மரியதாசுடன் தோப்பூரை விட்டுப் புறப்பட்டு அவ்வூர், காமநாயக்கன் பட்டி இடங்களுக்குச் சென்றபின், மதுரை நோக்கிப் பயணமானார். இவ்வாறு பல இடங்களுக்குச் சென்று விட்டு, 1692ம் ஆண்டு மே மாதம்வரை மறவ நாட்டின் எல்லைப்புற பகுதிகளிலே தங்கிப் பணிபுரிந்தார்.

(தொடரும்)

# கவிதைப் பூக்கள்

### இறைவா நீ வருவாயா

யேசு அப்பா வருவாயா
இதய சோகம் துடைப்பாயா
ஆசி தந்திட அழைப்பாயா
அன்பை அள்ளித் தருவாயா
நித்தம் அவலம் கேட்டாயா
யுத்தம் போக்கி வைப்பாயா
முத்தம் தருவேன் பெறுவாயா

எந்தன் இறையே யேசையா
மார்கழி உந்தன் பிறப்பையா
வடிவாய் என்னுள்ளம் வர் ஐயா
புதிதாய் பிறந்திட வருவாயா
விதியை மாற்றித் தருவாயா
அழியும் உலகை பாரையா
அமைதி தந்தெமை காரும் ஐயா

வி. அனற் சஞ்சிகா,
வட்டக்கண்டல்.

### சின்ன நல்ல இயேசுவே

சின்ன நல்ல இயேசுவே
சிறந்த நல்ல யேசுவே
சிங்காரப் பாட்டிசைத்தே
உன்னைப் போற்றி புகழ்வேன்
நல்ல இதயம் கொண்டவரே
நாளெல்லாம் காப்பவரே
அன்பு என்னும் மொழியிலே
வாழ்ந்திட வரம் தாருமே
கருணை இதயம் கொண்டவரே
கனிவுடன் எம்மைப் பாருமே
பார் போற்றும் மைந்தனே
என்றும் எம் துயர் தீருமே

ப. டினேஸ் அன்ரனி (டினேஸ்)
சின்னக்கடை, மன்னார்.

### மனமாற்றம்

விளையாட செல்ல வேண்டாம்
விவிலியத்தை படிக்க வேண்டும்
நற்செய்தி பரப்பவேண்டும்
நற்கனியை ஆய வேண்டும்

பாடசாலை செல்ல வேண்டும்
பாடர் குழாம் சேர வேண்டும்
மக்களையே சேர்க்க வேண்டும்
மனமாற்றம் ஆக வேண்டும்

செல்லையே தூக்க வேண்டாம்
செபமாலை ஓதிடுவோம்
கவலையும் படவேண்டாம்
கண்ணீரும் சிந்த வேண்டாம்

கிறிஸ்துபாலன் பிறந்து விட்டார்.
சந்தோசமாய் வாழ்திடுவோம்
சமாதானம் கிடைத்திடுமே.

தே. ஜெபராஜா, மடுக்கோவில்,மடு.


# சிரிக்க நீங்க ரெடியா?

## இப்படியும் ஒரு செபம்



காலை உணவின் முன் செபிக்கும் வழமையுள்ள ஒரு கொஸ்ரல் (விடுதி) மாணவர்கள் இறைவனுக்கு நன்றி நவில்தலை இவ்வாறு செய்தார்கள். "இன்றைய ஆகாரத்திற்கு நன்றி இறைவா! இதனை உண்ணும் சத்தியை எங்களுக்கு அளிக்குமாறு வேண்டுகின்றோம்."

## கிறிக்கெட் ஆர்வம்



ஒருவர் கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் ஆர்வமுடையவர். அவருக்குள் ஒரு சந்தேகம் இருந்தது. அதாவது மோட்சத்திலும் கிரிக்கெட் விளையாட்டு உண்டா? என்பது தான் அவரது சந்தேகம். இதனை அறிய வேண்டும் என்று அவர் மிக உருக்கமாக இறைவனை வேண்டினார். ஒரு தேவதூதன் அவரது கனவில் வந்து "பக்தனே ஒரு நல்ல செய்தி, மோட்சத்திலும் கிரிக்கெட் விளையாட்டு உள்ளது. அத்துடன் ஒரு துக்க செய்தி. அது என்னவெனில் அடுத்த வாரம் மோட்சத்தில் விளையாடும் கிரிக்கெட் குழுவில் உன் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கின்றது" என்றார்.

தே. மங்களறாஜ், மாணவர் இல்லம், முருங்கன்.

## பெற்றோல் முடிந்ததும்

ஒருவர்:- டாக்டர் என் மகன் பெற்றோலைக் குடித்துவிட்டு ஓடுகிறான். அவனை நீங்கதான் காப்பாத்தனும்.
டாக்டர்:- கவலைப்படாதீங்க... அவன் பெற்றோல் முடிந்ததும் தானாக நின்று விடுவான்.

---

காதலன்:- கண்ணே நான் உனக்காக இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கின்றேன்.
காதலி:- முதலில் உன் மூக்கை சிந்தி கொண்டுவா.

---

ஆசிரியர்:- மாணவர்களே நீரில் கரையும் இரண்டு பொருள் கூறுங்கள்
மாணவன்:- சீனியும், காகமும்.
ஆசிரியர்:- ஏன் காகம் என்று கூறினாய்.
மாணவன்:- காகமும் கா.... கா..... என்று கரையும்தானே சார்.

---

ஒருவர்:- ஏன் ஐயா கெல்மட் அணியாமல் மோட்டார் பைக் ஓடுகிறீர்கள்? ஆபத்து ஏற்படாதா?
மற்றவர்:- தர்மம் தலை காக்கும்.

பியூமிக்கா பிகிறாடோ, 7ம் வட்டாரம், பள்ளிமுனை

## பையனைக் கூப்பிட்டா...!

மனைவி:- பையனைக் கூப்பிட்டா நீங்கள் ஏன் ஓடி வாறீங்க.
கணவன்:- உடனே வாடான்னு கோபமா கத்தினியா, என்னைத்தான் கூப்பிட்டேன்னு நினைச்சிட்டேன்

---



ரகு :- உங்க மனைவிக்குத் தானே குழந்தை பொறந்திருக்கு. நீங்க எதுக்கு ஆறு மாசம் லீவ் எடுத்தீங்க?
ராஜு:- குழந்தைக்கு நான் இல்லே பால் கலக்கி கொடுக்கணும்.

---

மோகன் :- நான் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்துகிட்டிருக்கேண்டா
காந்தன்:- நீயாவது பரவாயில்லடா. நான் என் மனைவி கிழித்த கோட்டுக்குக் கீழே இல்லே வாழ்ந்துக்கிட்டிருக்கேன்,

வெ. சசிகலா, எமில் நகர் வீதி, மன்னார்.

## யாவும் கற்பனை.....!

ஒருவர்:- உதை பந்தாட்ட வீரர்களுக்கு பகிடிவதை எண்ட சொல்லே தெரியாதாம்.
மற்றவர்:- அப்படியா சந்தோசம், ஆனால் பகிடி உதை எண்டு இருக்குதா?

கணேஸ்:- டொக்டர் எத்தனை மணிக்கு வருவார்?
நேஸ்:- வயித்து வலி எண்டு பக்கத்து கிளினிக் போயிருக்கிறார் கெதியா வந்திடுவார்.

ஒருவர்:- எழுத்தாளரை திருமணம் செய்தது தப்பாபோச்சு
மற்றவர்:- ஏன்? என்னாச்சு?
ஒருவர்:- என் பெயரில் எழுதி உயிலின் இறுதியில் யாவும் கற்பனை என்று எழுதிவிட்டார்.

வே. நிமல்றஜீத், தரம் - 8, எழுத்தூர், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் வார்த்தை

# செபம் வாழ்வை சிறக்கச் செய்யும்

பணியாளர், முருங்கன்



ஒரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலோ, சமூக வாழ்க்கையிலோ பரந்து பட்ட உலக வாழ்க்கையிலோ செபம் என்பது மனிதனுக்கு மிகவும் அவசியமான ஒன்று. ஒரு உயிர் வாழ்வதற்கு மூச்சு எவ்வளவு முக்கியானதோ அதே போன்று ஆன்மீக வாழ்வுக்கு செபம் முக்கியமானது.

இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்கு புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார் (மாற். 1:35) (லூக்.4:42-44). யேசுவுக்கு இந்த செபம் எதற்காக தேவைப்பட்டது? அவர் இந்த உலகில் வாழ்ந்தபோது சொல்லொண்ணா துன்ப துயரங்களை அனுபவித்தார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தந்தையின் சித்தத்தை அறியும்பொருட்டு அவர் தந்தையிடம் சரணடைந்தார். செபத்தில் தன்னை கையளித்தார்.

இன்று நமது நாட்டில் நடப்பதை நம் கண்முன்னே பார்க்கின்றோம். போரின் கொடுமையால் தாங்கமுடியாத துன்பங்களை அனுபவித்தோம். இன்று இந்தப்போர் நிறுத்தப்பட்டுள்ளது. போர் இடம்பெற்ற காலத்தில் நமது மண்ணில் காலடி எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு கணமும் அச்சமும் அங்கலாய்ப்புமாக இருந்தது. அத்தகையதொரு சூழ்நிலையில் வாழ்ந்த நமக்கு உருக்கமான செபம்தான் விடிவைத் தந்தது. நம் நாட்டு மக்கள் கடவுளிடம் கையேந்தி, கையேந்தி கண்ணீர் சிந்தி வருந்தி வேண்டிய செபத்தின் விளைவுதான் இன்றைய அமைதி.

செபத்தின் வல்லமையையும் கடவுளின் இரக்கத்தையும் உணராத மனிதர்கள் உலகில் எங்கெங்கோ நிற்கின்றார்கள். அங்கும் நிம்மதி உண்டா என்று கேட்டால் அது கேள்விக்குறிதான்.

உண்மையான மகிழ்வின் இரகசியம் காசு பணம் பொருளில் இல்லை. அது இறையுறவில் - செபத்தில்தான் உள்ளது. கடவுளுடைய இரக்கம் எவ்வளவு மேலானது மதிப்பிட முடியாத பெறுமதி உள்ளது என்பதை ஏன் மனிதர் உணர்ந்து கொள்வதில்லை?

செபத்தின் தன்மைகள் பல்வேறுபட்டவை. சுயநல செபம், பிறநல செபம், பொதுநல செபம், நன்றிச் செபம், போற்றுதற் செபம், கடவுளை மகிமைப்படுத்தும் செபம் என்று நீண்டு கொண்டே செல்லும். இத்தனையிலும் நாம் கேட்பது எது முதன்மையானது என்பதைப் பற்றி நாம் சீர்துாக்கிப் பார்க்க வேண்டும். சுயநல செபம் நம் வாழ்க்கையில் உண்டு என்றால் நாம் அதற்காக நேரத்தையும் காலத்தையும் செலவு செய்து கடவுளிடமிருந்து பெரிதாக எதையும் பெற்றுக்கொள்ள முடியாது.

சிலுவை மரத்தில் இயேசு தொங்குகின்றார். வேதனையின் உச்சக்கட்டம்! இன்னும் சொற்ப வேளையில் அவரது ஆவி பிரியப் போகின்றது. அந்த வேளையிலும் "தந்தையே இவர்களை மன்னியும். இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள்" இதுதான் கடவுளுக்கும் மனிதருக்கும் உள்ள இடைவெளி. "உங்கள் உடைகளை அல்ல உங்கள் உள்ளத்தைக் கிழித்துக்கொண்டு நம்மிடம் திரும்பி வாருங்கள்." என்கிறார் ஆண்டவர். தன் நண்பனுக்காக உயிரைக் கொடுத்த மனிதர் இயேசு. அவர் சொன்னதைச் செய்தார். செய்ததையே சொன்னார்.

நீங்கள் செபிக்கும்போது வெளிவேடக்காரர்போல் செபிக்க வேண்டாம். வீதிகளிலும், தெருக்கோடிகளிலும் நின்று பிதற்றுவதால் உங்கள் செபம் கேட்கப்பட மாட்டாது. தனிமையான ஒரு இடத்தில் தந்தையோடு உறவு கொண்டு செபியுங்கள் என்று யேசு நமக்கு செபிக்கும் முறையை மனநிலையை தெளிவாக்குகின்றார். இயேசு மலைமீது ஏறிச் செபித்தார். தனிமையும் அமைதியும் இயற்கையின் கோலங்களும் நிறைந்த கானகத்தின் நடுவே - நதிக்கரை ஓரங்களில் - கடற்கரை ஓரங்களில் தனித்துச் செபிக்கும்போது இயற்கையே கடவுள் வார்த்தையைப் பேசும்.

ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் செபம் முக்கியமானதாக இருந்தது. அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டுதலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். (திருத்தூதர் பணி. .2: 42) தொடக்ககால கிறீஸ்தவர்களுடைய வாழ்க்கை முறையில் செபம் அதாவது இறைவேண்டுதல் முக்கியமானதாக இருந்ததினால் அவர்கள் மகிழ்ச்சியில் நிலைத்திருந்தார்கள்.

செபத்தின் வல்லமையால் ஒரு மனிதனின் நோய்களைக் குணப்படுத்தலாம், பேய்களை விரட்டலாம். ஒருவருக்கு புது வாழ்வு அளிக்கலாம். சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கலாம். அவ்வளவு வல்லமை செபத்திற்கு உண்டு.

கடவுளைப் போற்றி செபிப்போம். புகழ்ந்து செபிப்போம். தனித்து செபிப்போம். சமூகமாக செபிப்போம், ஒவ்வொரு நிகழ்விலும் செபிப்போம். நன்றி கூறி செபிப்போம். இயேசு நாற்பது நாட்கள் உண்ணா நோன்பிருந்து செபித்தார். அதன் வல்லமையால்தான் யாருமே இந்த உலகில் அனுபவிக்க முடியாத பாடுகள், மரணத்தைத் தழுவி உயிர்ப்பின் மகிமையை அடைய முடிந்தது. நாமும் செபிப்போம். இடைவிடாது செபிப்போம். இயேசுவைப் போல தந்தையின் திருவுளத்தை அறியச் செபிப்போம். செபமே நம் வாழ்வை சிறந்தோங்கச் செய்யும்.

# பரிசுத்த ஆவியின் திருக்கொடைகள் ஏழு

செல்வி. அந்தோனிப்பிள்ளை, மேரி அன்னா, விடத்தல் தீவு

சாதாரணமாக நாம் கொடைகளைப் பரிசில்கள் என்கிறோம். பரிசு வாங்குவதும், கொடுப்பதும் சாதாரண நிகழ்வாகும். இது பரிமாற்றப்படும்போது உறவு உறுதி அடைகிறது. பரிசு பெற்றவர் தானும் கொடுக்க வேண்டுமென நினைப்பது நன்றி உணர்வு. நான் மட்டும் பெற்றால் போதும் என்பது சுயநலம். நண்பர்களுக்கிடையே உள்ள பகிர்வு சமமான பரிமாற்றமாய் இருப்பது போன்றே, எமக்கும் தூய ஆவிக்குமிடையே பகிர்வு ஏற்படுகிறது. உறுதிப்பூசுதல் வழியாக தூய ஆவியானவர் ஞானம், புத்தி, விமரிசை, திடம், அறிவு பக்தி, தெய்வபயம் ஆகிய ஏழு கொடைகளையும் கொடுக்கிறார். இவை இலவசக் கொடைகளாகும். தூய ஆவியின் கொடைகளால் வளம் பெற்று ஞான முதிர்ச்சி பெற்ற வாழ்வொன்றினையே, தூய ஆவிக்கு நாம் பரிசாக வழங்க முடியும் (எசாயா 11:2.).



## ஞானம்

இறைவன் மேலானவர் என உணர்ந்து, அவரை அன்பு செய்து அவரின் வல்ல செயல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், உலக இன்பங்கள் எல்லாம் வீண் என உணரச் செய்து, பாவத்தால் இறைவனைப் பிரியாது வாழத்தூண்டும் நிலையே ஞானமாகும். (நீதி 8:11.) இறைவன் சாலமோன் மன்னன்மீது பிரியமானதினால் அவர் அறியணை ஏறினார். ஏதேனும் என்னிடம் கேள் என்ற போது அவர் ஞானத்தையே கேட்டார். இந்த ஞானம் இரு தாய்க்கு ஒரு பிள்ளை என்ற விவிலியக் கதையில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. (1அரசர் 3:16 - 28.) விஞ்ஞான வளர்ச்சி உச்ச நிலையை அடையும் இக்காலகட்டத்தில் சுயநலம் மலிந்து இறையுணர்வுகள் குறைந்து வருகின்றன. இச்சூழ்நிலையில் ஆவியானவரின் ஞானம் என்னும் கொடை வழங்கப்படுகிறது. ஆகவே இக்கொடைகளுக்காக மன்றாடவும், நன்றி கூறவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

## புத்தி (மெய்யுணர்வு)

ஒருவர் அனைத்தையும் இறைவன் பார்ப்பதுபோல் பார்த்து, எல்லா நிகழ்வுகளிலும், இறைவன் செயற்படுவதை உய்த்துணர அவருக்குத் தூய ஆவி வழங்கும் திருக்கொடையே புத்தியாகும்.

சவுலரசன் இஸ்ராயேல் மக்களின் முதலரசன். இவர் இறைவிருப்பப்படி நடவாததினால் சவுலுக்குப் பதிலாக ஈசாயினுடைய புதல்வர்களின் ஒருவரை அபிசேகம் பண்ணும்படி சாமுவேலுக்குப் பணித்தார். ஈசாயின் ஏழு புதல்வர்களும் வந்தார்கள். ஆனால் இவர்களில் எவரையும் இறைவன் அழைக்கவில்லை. மனிதன் முகத்தைப் பார்க்கிறான், இறைவன் அகத்தைப் பார்க்கிறார் என அறிந்த சாமுவேல் இவர்கள் இத்தனைபேரும் தானா எனக் கேட்டபோது இன்னொரு சிறுவன் இருக்கிறான் என்றதும், அவன்தான் அபிஷேகம் செய்யப்பட வேண்டியவன் என்பதைத் தெரிந்து கொண்டார். மெய்யுணர்வு கொண்டவர்கள் அனைத்தையும் இறைக் கண்ணோட்டத்தோடு காண்கிறார்கள்.

## விமரிசை (ஆலோசனை)

ஒருவர் தனது வாழ்வில் நல்லவற்றைக் கடைப்பிடித்து, தீயவற்றை இனம் கண்டு முற்றாக விலகி வாழ தூய ஆவி வழங்கும் கொடையே விமரிசையாகும். யோசேப்பு பார்வோன் அரசர் வீட்டில் படைத்தளபதியாகவும், மெய்க்காப்பாளர் குழுவிற்குத் தலைவராகவும் செயற்பட்ட நிகழ்வினை நாம் அறிவோம். பார்வோன் மனைவியின் தீய அழைப்பிலிருந்து, அவர் விடுபட்டதும் இக்கொடையினாலேயாகும். வயது ஏற ஏற முதிர்ச்சி அடைந்த அனுபவத்தால் நல்லது கெட்டது தெரிகிறது. ஆனால் நல்லதைக் கடைப்பிடிப்பதும், தீயவற்றை விலக்குவதும் வயது முதிர்ச்சியினால் வந்துவிடுவதில்லை. இது இறைவனால் மட்டுமே முடியுமானது. தீயதைப் பார்த்து நல்லது என்று சொல்லும் இக்காலத்தில் தூய ஆவியின் திருக்கொடையான விமரிசை எமக்கு முக்கியமாகும். சரியான நேரத்தில் சரியானதைச் செய்யவும், பாவத்திற்கு ஏதுவான இடம், பொருள், ஆள், நேரம், சூழ்நிலை இவற்றைத் தவிர்த்து வாழத்தூண்டும் கொடையே விமரிசையாகும்.

## அறிவு (நுண்மதி)

ஒருவன் தான் வாழும் சூழ்நிலையை நன்றாக அறிந்து, அதனால் இறைவனைக் கண்டு மகிழ அவருக்கு வழங்கும் திருக்கொடையே அறிவாகும். நன்மை தீமைகளைப் பிரித்து சீர்தூக்கிப் பார்க்க, உய்த்துணர பகுத்தறிவு மிக அவசியம். (மத். 16:13 - 17) நீர் மெசியா என்பதை சீமோன் இராயப்பர் கூறியபோது நீ பேறுபெற்றவன் என இயேசு கூறினார். இயேசு மெசியா என்பதை இராயப்பர் விசுவசித்ததோடு தெரியப்படுத்தியதும் இவ்வரத்தினாலேயாகும். படைத்தவைகளைச் சரியாக புரிந்து கொள்ளவும் அவைகளோடு நல்லுறவு கொள்ளவும் அதை மனித முன்னேற்றத்திற்கும் இறைவனின் மாட்சிமைக்கும் பயன்படுத்துவதுதான் அறிவாகும்.

## திடம் (மனஉறுதி)

என்ன கஸ்டங்கள் வந்தாலும் பறவாயில்லை என்று ஒருவர் கடவுளின் திருவுளத்தை துணிவுடன் நிறைவேற்ற தூய ஆவியானவர் அவருக்கு வழங்கும் கொடையே திடமாகும். புனிதர்கள் எம் திருச்சபையின் தூணாக உள்ளனர். 1986ம் ஆண்டு இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இனக்கலவரம் ஏற்பட்டது. கல்கத்தாவில் எங்கு பார்த்தாலும் ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். கொடுமைகளும் கொலைகளும் தலைதூக்கின. தனது மடத்திலுள்ள பிள்ளைகளைக் காப்பாற்ற திடம் கொண்டவராய் போர் நடந்துகொண்டிருக்கும் பயங்கரமான நிலையில் வெளியேறினாள் அன்னை திரேசா. அப்போ இராணுவப் படைகள் அவரை மறித்து வெளியே சென்றால் ஆபத்து ஏற்படும் என்றனர். அதற்கு அவர் நான் வெளியே செல்வது எந்த ஆபத்தையும் எதிர்கொள்ளவே என்றார். பின் அப்படைகளை ஊடறுத்தவராய் தன் பிள்ளைகளைக் காப்பாற்ற அஞ்சா நெஞ்சத்தோடு அன்னையவர் மன உறுதிகொண்டு உழைத்தார் என அவருடைய வரலாறு உணர்த்தி நிற்கின்றது. நாமும் எதிர் நீச்சல் கொண்டு திடம் எனும் கொடைக்காக செபிப்போம்.

## பக்தி

ஒருவன் இறைவன்மீது பற்றுறுதி கொண்டு அவருக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணிக்க தூய ஆவி அவருக்கு வழங்கும் திருக்கொடையே பக்தியாகும். இக்கொடையினால் பல புனிதர்கள் இறைவனுக்கே தம்மை முற்றிலும் அர்ப்பணித்தவர்கள். உதாரணம் புனித அக்னஸ், புனித மரியகொறற்றி, புனித ஜெசிலியா, இன்னும் பலர். நாம் வாழும் இவ்வுலகு நமக்குச் சொந்தமல்ல. மாறாக நாம் இவ்வுலகில் பயணம் செய்யும் பயணிகள். இதை மறந்து ஆசைகளினால் உந்தப்பட்டு நிறைவேறாத பட்சத்தில் வேதனை அடைகின்றோம். இதை விட்டு இக்குறுகிய காலத்தில் நாம் இறைவனோடு நெருங்கி பற்றிக்கொண்டிருத்தல் வேண்டும். எனவே இறைபற்றின்றி எதுவும் பயனில்லை. எனவே இறைவனுக்கு நம்மை அர்ப்பணித்து வாழத் தூண்டுவதுதான் பக்தி என்னும் கொடையாகும்.

## தெய்வபயம் (அச்ச உணர்வு)

ஒருவர் இறைவனுடைய மகிமையையும் அவரது மேன்மையையும் வியந்து தனது தவறுகளால் அவரது அன்பில் இருந்து விலகிப்போகாமல் இருக்க தூய ஆவி அவருக்கு வழங்கும் திருக்கொடையே தெய்வபயமாகும். இயேசுவை இராயப்பர் நன்றாக அறிந்திருந்தும் அவரை மறுதலித்தவர். இன்னுமொரு கட்டத்தில் இயேசு இராயப்பரை நோக்கி என்னை நேசிக்கிறாயா என்று கேட்டபோது அவர் தயக்கம் கொண்டார். ஏற்கெனவே மறுதலித்துவிட்ட நான் மீளவும் இந்நிலையில் தவறிவிடுவேனோ என்ற தயக்க நிலையில் தூய ஆவி அவருக்கு துணை நின்று மரியாதைப் பயத்தை உண்டு பண்ணுகின்றார். இத்தயக்கமே தெய்வ பயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### குளிக்கப் போய்

மாலை நேரம் மேற்கு வானில்
கதிரவன் மறைந்து கொண்டிருந்தான்.
நண்பர்களாக இருக்கும் இரண்டு பன்றிகள்
குளக் கட்டில் ஆடி அசைந்து
சென்று கொண்டிருந்தன.
குளத்தின் நடுப்பகுதியில் நீர் கிடந்தது.
அதைச் சுற்றி சேறு படர்ந்திருந்தது
ஒரு பன்றிக்கு குளிக்க வேண்டும்
என்ற ஆசை திடீரெனத் தோன்றியது.
"நண்பா வருகின்றாயா
நீராடிவிட்டு வரலாம்"
"உகூம் எனக்கு மூட் இல்லை"
"அப்படியானால் நீ
கொஞ்சம் இங்கேயிரு
நான் குளித்துவிட்டு வருகின்றேன்".
குளத்தை நோக்கி ஓடியது அது.
குளத்து நீரிலே வேண்டிய மட்டும்
ஆடிக் களித்தது. சரி போவோம் என்று
நீரை விட்டு வெளியே வந்தது.
பக்கத்திலே சேறு
மாலை வெயிலில் பளபளத்தது.
ஆகா இதிலே ஒருமுறை புரண்டால்......!
இரண்டாம் சிந்தனைக்கு இடமில்லை
பன்றி விழுந்து புரண்டது
சுகமோ சுகம்.... அப்படியொரு சுகம்....
பன்றியே தெரியவில்லை
சேறு மட்டுமே தெரிந்தது
குளித்து விட்டுச் செல்கிறோம்
என்பதில் பரம திருப்தி
குளக்கட்டிலே நின்ற மற்றப் பன்றியைப்
பார்த்துச் சொன்னது
உன்னைப் போன்றவர்களாற்றான்
நம் எல்லோரையுமே பன்றி பன்றி
என்று அழைக்கின்றார்கள்
மற்றப் பன்றி குபீரெனச் சிரித்து விட்டது.
அது ஏன் சிரித்தது என்று
குளித்துவிட்டு வந்த பன்றிக்கு
இன்றும் விளங்கவே இல்லை.

எஸ். எம். டி, பேசாலை.

### புது உலகம் செய்திடுவோம்

தேடுங்கள் இனியாவது
அன்பின் ஊற்றுக் கண்கள் எங்கென்று!
நேற்றுவரை இரத்தமும்
யுத்தமும் பித்துப் பிடித்தாடிய
இந்திலத்தில் அமைதி
அரும்புவதை - அருகிலே
காண்கின்றோம் - அதன்
அழகினை ரசிக்கின்றோம்
நமக்குள்ளே நாம்
களை எடுப்போம்
போரின் துயர்துடைப்போம்
துட்டமதற்கொரு புதைகுழி வெட்டி
புன்செயல் முழுவதற்கும்
பெரும் கல்லறை சமைத்திடுவோம்
சுத்தமாக தேச முத்தம்
செய்து நித்தம் நித்தம்- அமைதிக்
கோலமது போட்டிடுவோம்
கோரமதால் சருகாகிப்போன
எம் வையமதை பூக்காடாய்
மாற்றி - இறை புனிதமதை
நாடிடுவோம்.

புருஷோத்மன் நிஷாந்தினி,
பெரியகோமரசன் குளம், வவுனியா.

### பொறுமை

வெண்ணிலாக் காணும்வரை
அல்லியின் பொறுமை
சூரியன் வரும்வரை தாமரையின் பொறுமை
உறுமீன் வரும்வரை கொக்கின் பொறுமை
மலர் மலரும்வரை வண்டின் பொறுமை
கணவன் கிடைக்கும்வரை கன்னியின் பொறுமை
குழந்தை கிடைக்கும்வரை
அன்னையின் பொறுமை
இவை அனைத்துக்கும் மேலானது
நம் ஆண்டவர் இயேசுவின் பொறுமை.
ஆம்..... பாவி மனம் திரும்பும்வரை
அவர் மிகவும் பொறுமை சாதிக்கின்றார்.

ஆர். றொபின்சா
வண்ணாகுளம், அடம்பன்.

### ஓர் ஊமையின் கனவு

ஊமைப்பெண் ஒரு கனவு கண்டாள்
அதைச் சொல்ல நினைத்தாள்
ஆனால் முடியவில்லை
ஏனென்றால் அவள் வாய்பேசமுடியாத ஊமை
உலகமெல்லாம் இன்பவெள்ளத்துள் மூழ்க
அவள் வாழ்க்கை சோக வெள்ளத்தில்
வாழ்வு என்பது அவளுக்கு மட்டும்
எட்டாக் கனியோ?
உடல்தான் ஊனமே தவிர
உள்ளத்தில் ஊனமில்லை
இவ்வுலகின் கெட்ட கண்களுக்கு எதிராக
போராடினாள்
படித்தாள் பரீட்சை எழுதினாள்
இன்று பட்டதாரியாகி விட்டாள்
பணத்தைத் தேடும் பாரிலே - நல்ல
குணத்தைத் தேடுகிறாள்
உடலைப் பார்க்காது உள்ளத்தைப்பார்க்கும் -
நல்ல உறவைத் தேடுகிறாள்
அவள் ஆசை நிறைவேறுமா?
கனவுகளோடு காத்திருக்கிறாள்

ம. கொண்சி, பெண்கள் விடுதி,
உப்புக்குளம், மன்னார்.

### மூன்றெழுத்தில் வாழ்க்கை

உலகில் உள்ள உயிர் மூன்றெழுத்து
உயிரை இயக்கும் சக்தி மூன்றெழுத்து
சக்தியின் வடிவம் அன்னை மூன்றெழுத்து
அன்னை காட்டும் அன்பு மூன்றெழுத்து
அன்பை உயர்த்தும் அறிவு மூன்றெழுத்து
அறிவை வளர்க்கும் பள்ளி மூன்றெழுத்து
பள்ளியிற் கற்கும் கல்வி மூன்றெழுத்து
கல்வியால் உருவாகும் பதவி மூன்றெழுத்து
பதவியை சிறப்பிக்கும் இளமை மூன்றெழுத்து
இளமை தரும் மணம் மூன்றெழுத்து
மணத்தால் இணையும் மனைவி மூன்றெழுத்து
மனைவியால் உருவாகும் மழலை மூன்றெழுத்து
மனைவிக்கு செலவாகும் பணம் மூன்றெழுத்து
பணத்தினைத் தேடும் கைகள் மூன்றெழுத்து
கைகள் சோரும் முதுமை மூன்றெழுத்து
முதுமையின் பின் முடிவு மூன்றெழுத்து
முடிவின்பின் பெட்டி மூன்றெழுத்து
பெட்டியில் அடங்கும் பிணம் மூன்றெழுத்து
பிணம் செல்லும் ஊர்தி மூன்றெழுத்து
சுடலையில் வைக்கும் கொள்ளி மூன்றெழுத்து
கொள்ளியில் எறிந்த அஸ்தி மூன்றெழுத்து
அஸ்தி கரையும் கடல் மூன்றெழுத்து

கி. அனு, முதலைக்குத்தி

## மன்னா சிறுகதை

### நியாயமா?



தன் மகள் காதலிக்கிறாள் என்பது தெரிந்தாலே எந்த அப்பாவுக்கும் இரத்த அழுத்தம் ஏறத்தான் செய்யும். அதிலும், தன் வயதுள்ள ஓர் ஆசாமியை என்று தெரிய வந்தால்?

இராசையாவின் இரத்த அழுத்தம், உச்சத்திற்கு ஏறியது. 'தாயில்லாப் பெண் என்று செல்லம் கொடுத்து வளர்த்தது தவறாகிவிட்டது. இன்று, அரை ஊஹு"ம்... முக்கால் கிழமான ஒருவனை காதலிப்பது மட்டுமன்றி அவனைத்தான் கட்டிக்கொள்வேன் என்று அடம்பிடிக்கிறாள். இன்னும் குடி முழுகவில்லை... அந்தக் கிழத்தடியனை விரட்டிவிட்டு மகளை மீட்டுவிடலாம்...'

வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தவர், வீட்டிற்குள் மகள் நுழையவும் உஷாரானார். அவள் அறைக்குள் நுழைந்ததும், சட்டென எழுந்து வெளிப்புறமாகப் பூட்டினார்.

"நீ காதலிக்கிறியே அந்தக் கிழட்டுப்பயலை ஒரு வழிபண்ணிட்டு, பிறகு வந்து கதவைத் திறக்கிறேன்..." சினிமா அப்பாவாய் மிரட்டிவிட்டுப் புறப்பட்டவர்,

"ஒரு நிமிஷம் நில்லுங்கப்பா" மகள் குரல் தடுக்க, நின்றார்.

"ஏம்பா... உங்க பொண்ணு ஒரு கிழவனைக் கட்டிக்கப்போறான்னதும் உங்க மனசு என்ன பாடுபடுது... நீங்க ரெண்டாந்தாரமா கட்டிக்க, என் வயசுள்ள ஒரு சின்னப் பொண்ணை பார்த்துட்டு வந்திருக்கீங்களே... அவ அப்பாவுக்கும் அப்படித்தானே இருக்கும்... உங்களுக்கு ஒரு நியாயம், அவங்களுக்கு ஒரு நியாயமா? உங்களமாதிரி, எனக்கு புத்திகெட்டுப் போகல்ல... நான் ஒரு கிழவனை காதலிக்கிறதா சொன்னது, உங்களைத் திருத்தத்தான்..." தெளிவாக மகள் சொல்ல, விக்கித்துப்போய் நின்றார் இராசையா ■

எழுத்தாளர்களே,

*இதோ இரண்டு குட்டிச் சிறுகதைகளை உங்களுக்காக தருகின்றோம். இதேபோல் நீங்களும் எழுதலாமே! பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்காமல் நறுக்குத் தெறித்தால்போல சொல்ல வரும் செய்தியை சிறுகதைக்குரிய இலக்கணங்களோடு எழுதுங்கள். சிலர் சிறுகதை என்று சொல்லி "ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தார்...." என்றாற்போல தொடங்கி எழுதுகிறார்கள். அது சிறுகதையாகாது. நீங்கள் சிறந்த சிறுகதை எழுத்தாளராக வர ஒரே வழி சிறந்த சிறுகதைகளை நிறைய வாசிப்பதுதான். எங்கே எழுதி அனுப்புங்கள்.*

### ரிக்கற்

நான் பயணித்த அந்த சி. ரி. பி பேருந்து பஸ் ஸ்ராண்டில் நிற்கவும், செக்கிங் இன்ஸ்பெக்டர் ஏறவும் சரியாக இருந்தது. எனது டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு நான் நகர, எனக்குப் பின்னால் வந்த அந்தப் பெரியவர் மாட்டிக்கொண்டார்.

எனக்குப் பெருத்த ஆச்சரியம். அவர்தான் டிக்கெட் எடுத்தாரே... நான்தானே பாஸ் பண்ணி வாங்கிக் கொடுத்தேன்... பிறகெப்படி? எந்தவிதக் குற்ற உணர்வும் இல்லாமல் செக்கிங் இன்ஸ்பெக்டரிடம் தண்டப் பணத்தொகையைக் கட்டிவிட்டு கூளாக வந்தவரை வழிமறித்தேன்.

"அதோ போறானே ஒரு பையன்... அவனும் இந்த பஸ்லதான் வந்தார்" என்றார், ஒரு பத்து வயதுப் பையனைச் சுட்டிக்காட்டி.

"அவனுக்கென்ன?"

"அவன் டிக்கெட் எடுக்கல. செக்கிங்கைப் பார்த்ததும் தவியாய்த் தவிச்சான். மாட்டினா ரொம்ப அவமானமா போய்விடும். சின்னப் பையன்... இளமனசு... இந்த அவமானம் அவனுக்குள்ள ஆழப்பதிஞ்சு, அவனைச் சீரழிக்கலாம். நான் பரவால்ல, என்னிட்ட பணம் இருக்கு. அதுவுமில்லாம போய்ச் சேரப்போற கட்டை. அவமானமெல்லாம் ஒண்ணும் செய்யாது" என்றார்.

சட்டென்று எனக்கு அவரைக் கும்பிடத் தோன்றியது ■

## கைக்கூ கவிதைகள்

**முதுமை**
வாழ்க்கை புத்தகத்தின்
கடைசிப் பக்கம்.

**மனிதன்**
உலகத்திரை
நடிகன்.

**இரவு**
குருட்டு விழிகளின்
சமத்துவப் பொழுது.

**வாழ்க்கை**
சீராய் ஓட்ட நினைத்தேன்
ஏற்கெனவே
கிழிந்துவிட்டது.

**கண்**
காதலை பற்றவைக்கும்
தீக்குச்சி. அதை அணைக்க
போதிய நீரையும்
வைத்திருக்கிறது.

**நா**
சிந்திக்கமுன்
முந்தி ஓடுவான்
முந்தியபின் சிந்தனையை
தேடுகிறான்.

**துயில்**
நிரந்தரமாய் வரும் வரைக்கும்
நித்தம் வந்து கொண்டிருக்கிறான்.

அ. ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம், நானாட்டான்

**குயில்**
ஸ்வரங்கள் தெரியாமலே
கானமிசைக்கும் சங்கீதமேதை.

**மலர்கள்**
விலைமதிக்க முடியா
நறுமணத்தைச் சுமந்துகொண்டு
கண்களைக் கவருகின்ற
தெய்வலோக தேவதைகள்

**மனம்**
விரும்பிய வேளை விரும்பிய
இடத்தில் சஞ்சரிக்கும்
வினோதப் பறவை.

எஸ். எம். சிந்துஜா றோச்,
7ம் வட்டாரம்,
பள்ளிமுனை

தொடர் கட்டுரை - அங்கம் 8

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

**- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -**



பகுதி 1 வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்

### ஒப்புரவு நோக்கில் வியாகுல பிரசங்கம்

### ஆன்ம சோதனை

உண்மையான மனமாற்றத்திற்கு கடந்தகால நிகழ்கால வாழ்வு நற்செய்தியின் மதிப்பீட்டின் பின்னணியில் (ஆய்வு) சோதனை செய்யப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடு உத்தம மனம் வருந்துதலுக்கு உதவியாக அமையும். வியாகுல பிரசங்கத்தில் வழங்கப்பட்டுள்ள சிந்தனைப் பகுதியில் ஆன்மீக வாழ்வின் பல்வேறு நிலை, பல்வேறு கோணங்களிலிருந்து சிந்திப்பதற்கு உதவியாக அமைகின்றது. இலக்கியத்தில் கணிசமான பகுதி இந்த நோக்கிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இயேசு சபையினரின் ஆன்மீகப் பயிற்சியில் ஆன்மீக சோதனை முக்கியமான ஒரு செயற்பாடாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் இயேசு சபைக் குருமாரிடம் குருத்துவ பயிற்சி பெற்ற காரணத்தினால் இயேசு சபையினரின் ஆன்மீகப் பயிற்சி முறைகள் இவரது ஆன்மீக உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் என எண்ண இடமுண்டு.

மனமாற்றத்திற்குப் பாவப்பரிகாரம் முக்கியமான செயற்பாடாகும். 3ம் பிரசங்கத்தின் இறுதிப் பகுதியில் ஆசிரியர் மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடுமாறு அழைக்கின்றார். 5ம் பிரசங்கத்தில் கிறிஸ்துவின்மேல் யூதர்கள் சுமத்திய குற்றம் அவருக்கே ஏற்புடையது அல்ல. மாறாக கிறிஸ்தவர்களுக்கே ஏற்புடையது எனக் கூறப்படுகின்றது. வாழ்வு பற்றி மனப்பாங்கில் ஏற்படவேண்டிய மாற்றமும் உண்மையான மனவருந்தலும் பாவப்பரிகாரத்திற்கு தவிர்க்க முடியாத நிபந்தனைகளாகும்.

இவ்விலக்கியத்தில் பல இடங்களில் மக்கள் தங்கள் பாவ வாழ்க்கையை விட்டுவிடத் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டுமென ஆசிரியர் அழைக்கின்றார். பாவமன்னிப்பு கிறிஸ்துவின் பாடுகளுடன் நெருங்கிய தொடர்புள்ளது. கிறிஸ்து தமது பாவப்பரிகாரத்தினால் பாவிகளுக்கு தந்தையின் இரக்கத்தை பெற்றுக்கொடுத்தார். பாவி தான் எந்தளவிற்கு மனம் வருந்தி பரிகாரஞ்செய்தாலும் மன்னிப்பை நிபந்தனைப்படுத்த முடியாது. பரிகாரம் கீழ்ப்படிவுடன் துன்புற்ற யேசுவிடம் தன்னைக் கையளிப்பதாகும்.

திருச்சபையின் கட்டளைகள் (விதிகள்) சில பாவமன்னிப்பு அருட்சாதனம் பற்றியும் எடுத்துரைக்கின்றன. திருச்சபையின் கட்டளைகளுக்கும் பாஸ்கா காலத்து நிகழ்ச்சிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு இவ்வாறான கட்டளைகளில் ஒன்று கத்தோலிக்கர் வருடத்தில் ஒரு முறை என்றாலும் பாவ மன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. மேலும் பாஸ்கு காலத்தில் திவ்விய நற்கருணை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றது. எனவே கிறிஸ்தவர்கள் பாஸ்காவை பயனுள்ள வகையில் அனுசரிக்க உதவியாக யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் தமது இலக்கியத்தை ஆக்கியிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. தவக்காலங்களில் வியாகுல பிரசங்கத்தினை தியான நிலையில் படிப்பதும், படிப்பதைக் கேட்பதும் பாஸ்கா நிகழ்வுகளுக்கு தகுந்த வகையில் ஆயத்தம் செய்வதற்கு சிறந்த உதவியாக அமையும் என்பது வலுவான கருத்தாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் வாழ்வியல் வாழ்வியல் வாழ்வியல் வாழ்வியல் வாழ்வியல் வாழ்வியல்



# அவதானத்தோடு







# விற்பனை விளம்பரங்கள உங்களை முட்டாள்கள் ஆக்கலாம்

## பற்பசை (Toothpaste)

சிலவகையான பற்பசைகள் உபயோகித்து பல் தீட்டினால் பற்கள் உறுதியாகும் எனக் கூறப்படுகின்றது. நன்றாக பல் தீட்ட வேண்டுமென்பது உண்மை. பற்கள் உறுதியாவதற்குக் கல்சியம் சார்ந்த உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும் என்பது உண்மை. கல்சியம் உடம்பிற்குத் தேவை. பற்பசைக்கு அது தேவையில்லை. பற்பசைக்கு கல்சியம் கொடுத்து பல் தீட்டினால் பற்கள் உறுதியடையும் என்பதற்கு ஆதாரங்களில்லை.

## பால் (Milk food)

விற்பனை விளம்பரம் கூறுகிறது பால் குடித்தால் விக்கட் உடைய பந்து வீசலாம் என்று. பந்து எறிவதற்கு சர்ர சக்தி தேவை. அதே போன்று திறமையும் வேண்டும். ஆனால் விற்பனை விளம்பரம் திறமை இல்லாவிட்டாலும் பால் குடித்து போட்டியில் வெற்றி பெறலாம் என்றே கூறுகிறது. அதே நேரம் எதிர்த்து ஆடுபவரும் அதே பாலைக் குடித்திருந்தால் என்னாவது?

## அழகு சாதனப் பொருட்கள்

உடலை அழகுப்படுத்தும் பல பொருட்கள் விளம்பரங்களாக காட்டப்படுகின்றன. முகத்தின் நிறத்தை மெருகூட்டுவது முகப்பருக்களை இல்லாமல் செய்வது உடலில் ஏற்படும் துர்நாற்றத்தை நீக்குவது போன்றவற்றை உதாரணங்களாக குறிப்பிடலாம். இவ்விளம்பரங்கள் அனைத்தின் பின்னணியிலும் ஆண், பெண் இருபாலருக்கும் ஏற்படக்கூடிய உடல் கவர்ச்சி முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. இவற்றை பயன்படுத்தினால் ஆண்களிடத்தில் பெண்களும், பெண்களிடத்தில் ஆண்களும் கவரப்படுவார்கள் என்ற தவறான கருத்து முன்வைக்கப்படுகின்றது.



## நுளம்புச் சுருள் (Mosquito coil)

நுளம்புச் சுருள் பற்றினால் டெங்கு, மலேரியா தொல்லைகள் இல்லாமற் போகும் என விளம்பரத்தில் கூறப்படுகின்றது. உண்மையில் டெங்கு, மலேரியா அழிக்கப்பட வேண்டுமென்றால் நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் துப்பரவு செய்யப்படவேண்டும். சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இவ் விளம்பரத்தை தொடர்ச்சியாக பார்ப்பவர்கள் சுற்றுச் சூழல் சுத்தம் குறித்த அக்கறை இல்லாமல் சுருள் இருந்தால் போதும் என்றே நினைப்பார்கள்.

## ஷம்போ (Shampoo)

பெண்களின் கூந்தல் விட்டமின் மிகுந்த ஷாம்போ உபயோகித்தால் அடர்த்தியாக வளரும் என விளம்பரத்தில் கூறப்படுகின்றது. உண்மையில் நாம் உண்ணும் உணவில் எந்த அளவிற்கு விட்டமின் சத்துக்கள் நிறைந்திருக்கின்றதோ அதன் மூலமே கூந்தல் வளரும். விட்டமின் உடம்பின் உட்பாகத்திற்கே தேவை. தலையின் மேற்பாகத்திற்கு அல்ல.

## பதப்படுத்தப்பட்ட மாமிச உணவு (Sausages)

சிறுபிள்ளை தன் தாயிடம் அம்மா நீங்கள் என்னில் அன்பாய் இருந்தால் Sausages செய்து தாருங்கள் எனக் கேட்கின்றது. அம்மா அதைச் சமைத்து மகளிடம் கொடுக்கின்றார். தாய் பிள்ளையில் அன்பு என்றால் Sausages சமைத்துக் கொடுக்கவேண்டுமென விளம்பரம் கூறுகின்றது. அவ்வாறாயின் Sausages = அன்பு. உண்மையில் Sausages இல்லை என்றால் அன்பு இல்லையா? அம்மாவின் அன்பு என்பது Sausages தானா? Sausages வாங்கிக் கொடுக்க முடியாத பெற்றோர் பிள்ளைகளிடம் அன்பு இல்லாதவர்களா?

மற்றொரு விளம்பரம்: சிறு மகனொருவர் Sausages உண்டு 100 மார்க் வாங்குகின்றார். விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி கேடயம் பெற்றுக்கொள்கிறார். இதைப் பார்க்கும் பிள்ளைகள் பரீட்சையில் சித்தியடைய கீல்ஸ் சாப்பிட்டால் போதுமென நினைக்கலாம். அதேபோன்று விளையாட்டுப் போட்டியில் வெற்றியடைவதற்கு பயிற்சி தேவையில்லை. Sausages உண்டால் போதும் என்றும் நினைக்கலாம்.

## சொக்கலெட் (Chocolate)

விளம்பரத்தில் சொக்கலெட் மழை காட்டப்படுகின்றது சீனி மழையும் காட்டப்படுகின்றது. உண்மையில் இவ்வளவு உண்டால் நோய்தான் ஏற்படும். எமது வாழ்வில் நாம் தனியாக ஒரு சொக்கலெட் சாப்பிடுவதில்லை. காரணம் பகிர்ந்து உண்ண நாம் பழகியுள்ளதால். மற்றும் அதிகம் உண்பது உடலுக்குத் தீங்கு என்று நாம் உணர்ந்திருப்பதால். ஆனால் விளம்பரம் அதிகம் தனியாக உண்பதுதான் நலம் எனக்காட்டுகின்றது.

# குடும்பக் குவலயம்





## குடும்பம் இன்பமாக வாழ அன்பு ஒன்றே அவசியம் தேவை



திருமணம் என்பது வாழ்விலோர் திருநாள். திருமணம் என்பது இருவர் மனத்தைக் குறிக்கிறது. திருமணத்தின்போது தம்பதிகள் மல்லிகை, முல்லை, ரோஜா மற்றும் பல மலர்களால் அலங்கரிக்கப்படுகிறார்கள். கையில் தரப்படும் பூச்செண்டு முகர்வதற்காகத்தான். மாலைகளில் மலர் மணம் கமழ்கின்றது. மணமக்கள் மாலை மாற்றிக் கொள்கிறார்கள். மணப்பெண்ணுக்கு அன்றுதான் வாழ்வே தொடங்குகின்றது. மாலையை மாற்றிக் கொள்வதன் மூலம் தம்பதிகள் ஓர் உயிராகின்றனர்.

வாசனை என்பது வெளிப்படையானது. மலரின் வாசனை மட்டுமல்ல. மனிதனது மனதுக்குள்ளே வாசனை உள்ளது. புருஷன் தன் மனவளர்ச்சியையும் வாசனையையும் மனைவியிடம் இன்னதென்று மாலையிடுவதன் மூலம் உணர்த்தி விடுகிறான். அவளும் தன் மனவாசனையும் இத்தகையதுதான் என்று உணர்த்தி விடுகிறாள்.

தந்தைக்கு ஓர் இரவு - தாய்க்கு 300 இரவுகள். உயிர் கொடுப்பவன் தந்தை - அதை உருவாக்குபவள் தாய். அன்பும் குணமும்தான் இல்லறப் பூங்காவாக மாறுகிறது. சந்தனக் கட்டையை எவ்வளவு தேய்த்தாலும் ஒரே மணம்தான் வரும். அதை அதிகமாகத் தேய்த்தால் புதுமையாக வேறு மணம் வந்து விடாது. அதே போல்தான் ஒரு பெண்ணின் இயல்பான குணங்களை மாற்ற முடியாது. தன்னைவிட, மூத்த பெண்ணை மணம் செய்யக் கூடாது.

பெண்கள் இல்லாவிடில் கவி இல்லை, பாட்டில்லை, நடிப்பு இல்லை, கூத்து இல்லை, சண்டை இல்லை, போட்டி பொறாமை இல்லை, கொலை கொள்ளை இல்லை, மாடமாளிகை இல்லை, பொன்னும் பொருளும் இல்லை, வர்ணனை இல்லை, ஓவியமோ, காவியமோ இல்லை, ஆண்கள் இல்லாவிடில் பெண்களுக்கு இவ் உலகமே இல்லை. காமமும் பசியும் இல்லாவிட்டால் வாழ்க்கையே பயன் அற்றுபோகும்.

### நல்ல முறையில் வாழ்ந்துகாட்ட வேண்டியது இருவரதும் கடமையே

ஒரு லட்சிய மனைவியானவள் தன் கணவனைப் பார்க்கும் போது மகிழ்ச்சி அடைவாள். புன்முறுவல் செய்வாள். கணவனுக்கு மனைவி பல விதங்களிலும் ஊக்கம் அளிக்க வேண்டும். மனைவியின் ஊக்கத்தினால்தான் கணவனால் முன்னேற முடியும். மனைவியானவள் மிக ஆடம்பரமாக செலவு செய்து கொண்டு, கணவனின் சம்பாத்தியத்தை குறை கூறிக்கொண்டே இருப்பதும், எதிர்வாதாடுதலும், உற்றார் உறவினர் வெறுப்பைத் தேடிக் கொண்டு, ஆதரவு அற்றவளாய் நிற்பதும் கூடாது.

சிரித்து வாழ வேண்டுமே தவிர, பிறர் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்படி வாழக் கூடாது. கன்னிப்பெண்களுக்கு அவர்கள் சம்மதம் இல்லாமல் பெரியோர்களோ, பெற்றோர்களோ திருமணம் செய்யக்கூடாது.

கடல் நீரானது கப்பலை தாங்கிச் செல்கிறது. அதே கடல்நீர்தான் கப்பலையே கவிழ்த்தும் விடுகிறது. அதைப்போலவே திறமையான மனைவி குடும்பத்தைக் காப்பாற்றி வளர்க்கிறாள். திறமை இல்லாத ஊதாரி மனைவியோ ஒரு குடும்பத்தையே கவிழ்க்கிறாள். வாழ்க்கையில் நாம் ஒரு முறைதான் வாழ்கிறோம். அதை அற்புதமாக ஒரு நல்ல தலைமுறையை உருவாக்கி வாழ்ந்து காட்ட வேண்டும். பிறர் போற்றத்தக்க அறிவாளிகளாகவே வாழ்ந்து காட்ட வேண்டும். ஒரு குடும்பம் கண்ணியமாக வாழ அன்புதான் முக்கியமாக வேண்டும். பேச்சைக் குறைத்து செயலில் ஈடுபட வேண்டும். ஆண் - பெண் உறவின் சுகத்திலேதான் இந்த உலகமே அடங்கி இருக்கிறது.

இளைஞனும் இளம் பெண்ணும் திருமணத்திற்கு பின்தான் இன்பத்தின் வாசலை அடைகின்றனர். அங்கேதான் கற்பனைகள் உருவாகின்றன. கவிதைகள் உருப்பெறுகின்றன. அனுபவங்கள் அங்கேதான் ஆரம்பமாகின்றன.

பழகப் பழக பாலும் புளிக்கும் என்பார்கள். ஆனால் பண்புள்ள மனைவியோ எப்போதும் புளிப்பதில்லை. அவள் வற்றாத ஊற்று. பருகப் பருகத்தான் இன்பம் அளிக்கும். நாணமில்லாத பெண் மானத்தையே இழக்கிறாள். மானத்தோடு வாழ்வதே மரியாதை. இத்தனையையும் புரிந்து கொண்டு வாழ்ந்தால் இல்லறத்தின் வசந்தத்திற்கேது குறை?

# மருத்துவ மஞ்சரி

## சின்னஞ்சிறு ஆலோசனைகள்

உங்கள் பற்களில் பல் நோய்களா?

புதினாக் கீரையை வெயிலில் உலர்த்தி தூள் செய்து கொண்டு அதனுள் கொஞ்சம் உப்பு சேர்த்து தினம் பல் துலக்கினால் பல் நோய்கள் வராது.

உங்கள் வயிற்றில் கிருமியா?

தினசரி வெங்காயத்தை உரித்துப் பச்சையாக உண்டு வந்தால் வயிற்றினுள் உள்ள கிருமிகள் இறந்துவிடும் முருங்கைக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் வயிற்றிலுள்ள கிருமிகள் இறந்துவிடும். அத்தோடு இரத்தம் இல்லாதவர்களுக்கு புது ரத்தம் உற்பத்தியாகும்.

ஜீரண சக்தி குறைவாக உள்ளதா?

ஜீரண சக்தி குறைவாக இருப்பவர்கள் நாலைந்து கராம்பைக் கால்க் கோப்பைத் தண்ணீரில் தட்டிப் போட்டுக் கொதிக்க வைத்துக் குடித்தால் களைப்பு கை கால் உளைச்சல் நீங்கி நல்ல பசி எடுக்கும்.

*ம.சர்மலிற்றா, மன்/ஆ. குளம் றோ.க.த.க.பாடசாலை*

## தலை வலிக்கிறதே?



ஆண் பெண் என்ற பாலரும் வயது வித்தியாசமின்றிச் சொல்லும் வார்த்தை இது. தலைவலியில் பல வகைகள் உண்டு. சாதாரணமாக ஓய்வற்ற உழைப்பு, மன உளைச்சல் போன்ற காரணங்களால் தற்காலிகத் தலைவலி வந்து போவதுண்டு. ஆனால் மைக்ரைன் எனும் தலைவலி சற்று ஆபத்தானது.

ஒரு பக்க அல்லது இருபக்கத் தலைவலி வந்து பிறகு குமட்டல், வாந்தி போன்றவை இணைந்து கொள்வது மைக்ரைன் தலைவலியின் அறிகுறிகளாகும். கண்ணில் கரும் புள்ளிகள் விழுவது போன்ற பிரம்மை, கண்கள் இருட்டல் போன்றவை மைக்ரைனின் அடுத்தக் கட்டம். இத்தலை வலி பொதுவாகப் பெண்களையே தாக்குகின்றது. பரம்பரை நோயாகக்கூட இது தொடரலாம். சொக்லட், சீஸ், மதுபானம் போன்ற உணவு வகைகளும் இந்தத் தலைவலியைத் தூண்டக் கூடியவை. குறித்த ஏதாவதொரு உணவுப்பொருளை உட்கொண்ட பின்னால் இத்தலைவலி வருகிறதாக அவதானிக்கப்பட்டால் அவ்வுணவைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கருத்தடை மாத்திரைகள் தரும் பக்கவிளைவுகளில் மைக்ரைனும் ஒன்று. அஸ்பிரின், பிரிசிடமோல் போன்ற மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையோடு உட்கொள்வது இத்தலைவலிக்கான நிவாரணம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் கட்டுரைப்போட்டி – குழு – 03 ல்

## முதலாம் இடம் பெற்ற கட்டுரை

அ. ஜூலியற் றொசானி, (பம்பை மடு பங்கு)

கட்டுரையின் தலைப்பு

## உறவே வாழ்வு (நற்கருணையை மையப்படுத்தியது)

நம் கடவுளின் சிறப்பியல்பு உறவு கொள்வதாகும். உறவு என்பது ஒருவர் இன்னொருவரிடம் கொண்டுள்ள தொடர்பு ஆகும். இதை கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு, மனிதர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு என்று பிரிக்கலாம். கடவுளோடு நாம் உறவை ஏற்படுத்திக் கொள்வதும் அதில் என்றும் நீடித்து நிலைத்திருப்பதும் அவ்வாறே பிற மனிதரோடு அன்புறவில் வாழ்வதும் கடவுள் மனிதருக்கு விடுத்திருக்கும் மாபெரும் அழைப்பாகும். இத்தகைய உறவு வாழ்வுக்காகவே கடவுள் அருட்சாதனங்களை ஏற்படுத்தினார். அருட்சாதனங்கள் இறை மனித உறவுகளை வளர்க்கும் உறவுக் கொண்டாட்டங்கள் ஆகும்.

உறவே உன்னத இறைவனின் உயரிய வாழ்வாகும். சுவர் இருந்ததால்தான் சித்திரம் வரைய முடியும் என்று கூறுவார்களே! அதுபோல் உறவுகொண்ட உள்ளங்கள் உயர்ந்தால்தான் உயர்வான வாழ்வு உதயமாகும். இவ்வாறான ஒரு வாழ்வு உருவாவதற்கு இயேசுக்கிறிஸ்து தமது உடலையும் இரத்தத்தையும் எமக்கு அளித்தார். எமது பாவப்பட்ட வாழ்விற்கு ஆன்மீக உணவாகவும் பானமாகவும் அதை எமக்கு வழங்கினார். இவ்வாறு தம்மையே கையளிக்கக் காரணமாக அமைந்தது அவர் மனிதர்மேல் கொண்ட அன்பாகும். எனவே அருளப்பர் எழுதிய நற்செய்தியில் 6ம் அதிகாரம் 51ம் வசனம் எமக்கு கூறுகின்றது "விண்ணிலிருந்து இறங்கி வந்த வாழ்வுதரும் உணவு நானே இதை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை நான் உணவாகக் கொடுக்கிறேன். உலகம் வாழ்வதற்கே அதைக் கொடுக்கின்றேன்" என்றார். எனவே இயேசுவின் உணவு எமது உலகப் பசிக்கு விருந்தல்ல. எமது ஆன்மீகப் பசிக்கு மருந்து. அது புது வாழ்வுக்கு வழிசமைக்கின்றது. இதே நற்செய்தியில் "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். மானிட மகனுடைய சதையை உண்டு இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்." வாழ்வளிக்கும் வள்ளல் வல்லமையின் தந்தையாக இருக்கிறார். தொடர்ந்து 56ம் அதிகாரத்திலே "எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னுடன் இணைந்திருப்பர் நானும் அவர்களோடு என்றும் இணைந்திருப்பேன்" என்றார். இறைவனையும் மனிதனையும் ஒன்றாக இணைத்து வாழ்வு தருவது நற்கருணை உறவாகும். இவ்வுறவின் மூலம் இயேசு தம் வாழ்வை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். வாழ்வின் அடையாளங்களாகிய அன்பு, அறிவு, நேரம், உழைப்பு என்பவற்றை பிறரோடு பகிர இது ஒரு அழைப்பு. இயேசுவின் திருஉடலும் திருஇரத்தச் சடங்கும் உள்நாக்கோடு ஒட்டிக் கொள்ளும் வெறும் அப்பத்துண்டை உண்ணும் சடங்கு அல்ல. உலகில் உள்ள நூறு கோடி கத்தோலிக்கரை ஒரே நபராக வாழச்செய்யும் ஆற்றல் படைத்தது.



எனவே கிறிஸ்துவை தலையாகக்கொண்டு வாழ்வோம். எமது திருச்சபையில் இறைவனின் பிரசன்னத்தின் மூலம் புது உறவு புது வாழ்வு கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் "உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்" என்று உதட்டினால் மட்டும் பாடிவிட்டுச் சென்றால் போதாது. எமது உள்ளமாகிய ஆலயத்தில் தகுதியான முறையில் இறைவனை உட்கொண்டு எமது இதய வீட்டில் இறைவனுடன் இணைந்து புது உறவை ஏற்படுத்தி வாழ்வோம். உறவே வாழ்வின் அடிப்படையாகும்.

## உங்களுக்கு தெரியுமா?

### மாணவர் மறையறிவுப் பகுதி இல. 2

மாணவர்களின் மறையறிவை வளர்க்க
மன்னா ஆரம்பிக்கும் புதிய பகுதி

கேள்வி கேட்பது நாங்கள்! விடை எழுதுவது நீங்கள்!

*(இப்போட்டி பற்றிய நிபந்தனைகள் மற்றும் விளக்கமான விபரங்களை கடந்த மாத மன்னாவில் (மே மாதம்) பக்கம் 9ல் பார்த்து தெரிந்து கொள்ளவும்)*



தாம் வாழ்ந்த காலத்தில் இவ்வுலகப் புனிதையாக எண்ணப்பட்டவள் அன்னை தெரேசா. எங்கோ ஒரு நாட்டில் பிறந்து இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களின் துயர கீதங்களோடு தம்மை இணைத்துக் கொண்டவர். எத்தனையோ, விருதுகள் தன்னை நாடித் தேடி வந்தபோதெல்லாம் அவற்றை மக்களின் நன்மைக்காக ஏற்று அவ்விருதுகளுக்குப் பெருமை சேர்த்துத் தன் பாதையில் , கிறிஸ்துவின் பாதையில் தாழ்மையோடு நடந்து சென்றவள் இந்த அன்னை.

**கேள்விகள்:**

1. அன்னை தெரேசா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
2. அவர் பிறந்த நகர் எது?
3. இவரின் தந்தையார் பெயர் என்ன? தாயார் பெயர் என்ன?
4. இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?
5. இவரது பிறந்த தினம் எப்போது?
6. இவருக்கு ஒரு மூத்த சகோதரனும் ஒரு மூத்த சகோதரியும் இருந்தார்கள். அவர்களின் பெயர் என்ன?
7. இவரின் இயற் பெயர் என்ன?
8. இவர் வங்கத்தின் தலைநகர் கல்கத்தாவுக்கு வந்தது எப்போது?
9. அன்னை ஆரம்பித்த துறவற சபையின் பெயர் என்ன?
10. இவர் இறந்தது எப்போது?

விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள்.
20. 07. 2003

உங்களுக்குத் தெரியுமா
மாணவர் மறையறிவுப்போட்டி இல. 1ற்கான
மிகச் சிறந்த விடை எழுதி பரிசு பெறுபவரையும்
அவரது விடையையும் அடுத்த மன்னாவில்
எதிர்பாருங்கள்

## தமிழர் ஒரு தேசிய இனம்

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்த இரண்டு இன மக்களும் தங்கள் தாய் நாட்டில் வாழ்வதில் தடைகள் இருக்கக் கூடாது. இந்த உண்மைகள் எப்போதும் இருக்கும் போதுதான் நீதியான உரிமை மக்களுக்கு கிடைக்கும். இப்படிச் செய்வதால் எவரும் எதையும் இழந்து போகமாட்டார்கள். எனவே இந்த உண்மையின் அடிப்படையில் நீதியின் அடிப்படையில்தான் உண்மையான சமாதானம் நிலவும். எனவே இன்றைக்கு இளைஞர்கள் உண்மையின் அடிப்படையில் சிந்திக்க வேண்டும். நம்முடைய நாட்டை அரசியல்வாதிகளிடம் கையளித்துவிட்டு நாம் தூங்கிக் கொண்டிருக்கிறோம். எங்கள் நாட்டில் போர் வேண்டாம், இழப்புக்கள் வேண்டாம். சிறிய நாடு இதனைத் தாங்கிக் கொள்ளாது. எனவே உண்மையுள்ள சமூதாயத்தை கட்டி எழுப்ப இளைஞர்கள் துடிக்க வேண்டும். ஆகவே பல இழப்புக்கள் மூலம் இளைஞர்கள் மத்தியில் கசப்பான எண்ணங்கள் எழுந்துள்ளன. இது தொடர்ந்தும் இருக்கக் கூடாது. எனவே இளைஞர்கள் ஒப்புரவு மனப்பான்மைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். எனவே இந்த இடத்தில் இளைஞர்களாகிய நீங்கள் இந்த ஒன்றுகூடலின் மூலம் சகோதர அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். நம் மத்தியில் ஒரு உறவு பாலத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

## மக்கள் மேடை


### *பெரியமுறிப்பு குஞ்சுக்குளம் பாதையிலுள்ள பாலம் புனரமைக்கப்படுமா ?*

### மக்கள் கேட்கிறார்கள்

பெரியமுறிப்பு, குஞ்சுக்குள மக்களின் போக்குவரத்துக்கு மையமாக விளங்குவது ஒரே ஒரு வீதி. அதில் இரு பாலங்கள். வீதி முழுவதும் கற்கள் சிதறி படுமோசமான நிலையில் உள்ளது. அதுமட்டுமல்ல மழைக்காலங்களில் வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறுவதில்லை. காரணம் ஆற்றில் வெள்ளம் வந்துவிடும். இருபாலங்களாலும் மட்டுமே மக்கள் பயணம் செய்வர். அந்த இருபாலங்களிலும் உள்ள பலகைகள் தற்போது உடைந்து, உக்கி காணப்படுகின்றன. பெரும் பயங்கரத்தின் மத்தியிலே மக்கள் பயணம் செய்கின்றனர். பங்குத்தந்தை திருப்பலி வைக்கக்கூட வரமுடியாத நிலையில் மிகவும் கஸ்ரப்பட்டே வருகின்றார். எனவே சம்மந்தப்பட்டவர்கள் எம் கிராம மக்களின் அவல நிலையைக் கண்ணோக்கி எமது வீதியையும், பாலத்தையும் புனரமைத்துத்தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியமுறிப்பு கிராம மக்கள்.

*வடக்கு கிழக்கு நிவாரணத்திற்கான ஒதுக்கீடு குறிப்பிடப்படாமல் 450 கோடி டாலரை சர்வதேசம் வழங்கியிருப்பது நிதி உதவிக்கான அடிப்படையையே அர்த்தமற்றதாக்கி விடும். -செய்தி விமர்சம்*




*நன்றி தினக்குரல்*

## அரசியல் அரங்கம்

உரத்த சிந்தனை – உரைப்பது – ஸ்நாபகன்

## சங்கடத்தில் மாட்டியுள்ள சமாதானம்

சமாதானக் கால்வாய் இப்பொழுது பாரியளவில் உடைப்பெடுத்துப் பெருகும் நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இனிமேல் எந்த இடத்தில் அணைகட்டுவது என்பதையே இனம் காண முடியாத நிலை தோன்றியுள்ளது. நம்பிக்கையீனங்கள், முரண்பாடுகள், முறுகல்கள் வேகமடைந்துள்ள இன்றைய காலகட்டத்திலே சமாதான இலக்கை அடைந்து கொள்வதென்பது இலகுவான காரியமல்ல.

பல்வேறு இடர்களையும் தடங்கல்களையும் சந்திக்க நேரிடும் என்பதை தெரிந்து வைத்துக்கொண்டுதான் சகல முயற்சிகளும் நடந்தேறுகின்றன. சமாதான பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகளை ஈடுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலமை தொடர்கின்றது.

### முல்லைத்தீவு அனர்த்தம்

முல்லைத்தீவு கடலிலே விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவமும் 12 போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனரா? கொல்லப்பட்டுள்ளனரா? என்ற விடயமும் இன்னும் தெளிவு பெறவில்லை. கடற்படையினர் தரப்பிலிருந்து கடந்த காலங்களில் வெளிப்பட்ட முனைப்புகளின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் நடந்தேறியுள்ளதாக விடுதலைப் புலிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினரே கப்பலைத் தாக்கி மூழ்கடித்தனர் என்று விடுதலைப் புலிகளும், தாம் கப்பலை சோதனையிடப் போவதை அறிந்ததும் விடுதலைப் புலிகள் தங்கள் கப்பலை தாங்களே மூழ்கடித்துள்ளனர் என்று கடற்படையினரும் கூறியுள்ளனர்.

### நாடளாவிய வன்முறைகள்

யாவற்றுக்கும் மேலாக நாடளாவிய நிலமையிலே வன்முறைகள் தலைதூக்குவதற்கான அறிகுறிகள் அங்குமிங்கும் தென்படுகின்றன.. படுகொலை சம்பவங்களும் சட்ட விரோத நடவடிக்கைகளும் தொடர்வதன் காரணமாக நாட்டின் பிரதான நகரங்களின் நுளைவாயில்கள் மற்றும் முக்கிய நகரங்களில் சோதனை நடவடிக்கைகள், கண்காணிப்புகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.


வாளைச்சேனையில் கிறிநெற் வீச்சு, மட்டக்களப்பு கல்லடியில் கொலை, இராணுவ புலிகள் சர்ச்சைகளின் காரணமாக யாழ்ப்பாணம் சுழிபுரத்திலே வடக்கம்பரைப் பகுதியில் பெரும் பதட்டம், திருகோணமலை சம்பவத்தைத் தொடர்ந்து பாக்குநீரினை கடற்பரப்பில் இந்திய இலங்கை கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை என்ற தகவல்கள் எல்லாமே பரபரப்புக்களை வேகமடைய வைக்கின்றன.

### மக்களின் ஏக்கம்

ஜப்பானிய மகாநாட்டிலே வெளிப்பட்ட சமாதானம், நிதியுதவி, மீண்டும் பேச்சுவார்த்தை என்ற விடயங்களின் பின்னர் வெளிப்படுகின்ற எதிரொலிகள் இலங்கையிற் சமாதான அரசியலை சங்கடங்களின் மத்தியில் தள்ளும் விடயமாகவே மாற்றிவருகின்றது. மக்களின் ஏக்கமும் எதிர்பார்ப்பும் சமாதானமே. மீண்டும் ஓர் போர் ஏற்படுவதை மக்களால் கற்பனை செய்யவே முடியாது.

## வரலாற்று மேற்கோள்





"இலங்கையின் 20ம் நூற்றாண்டின் அரசியலின் விளைவுதான் பிரபாகரன். புலிகளை பணிய வைப்பதன் மூலம் மாத்திரமல்ல, தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கும் வகையில் சமஷ்டி அரசு முறைக்கான அரசியலமைப்பை மீளவரைவதன் மூலமும் பிரச்சினைகளை அகற்றுவதே இன்றைய அரசியல்வாதிகளுக்குரிய வேலை"

(2003 ஏப்ரல் 28 ரைம் சஞ்சிகையில் அன்ரனி ஸ்பீத் எழுதிய கட்டுரையொன்றில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக மேற்கோள் காட்டப்பட்ட வாசகம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழி நீர் அஞ்சலி விழி நீர் அஞ்சலி விழி நீர் அஞ்சலி விழி நீர் அஞ்சலி விழி நீர் அஞ்சலி

## அருட்சகோதரி வலன்ரைனுக்கு விழிநீர் அஞ்சலி

# எல்லோருக்கும் எல்லாமாக வாழ்ந்தவர்



சித்திரைத் திங்கள் 27ம் நாள் மறைந்த யாழ். முன்னைநாள் ஆயரின் அடக்கச்சடங்கில் பங்குபற்றிவிட்டு, தியான ஒடுக்கமும் செய்து விட்டு, தம்பி குடும்பத்தினரையும் பார்த்துவிட்டு 15 நாட்களில் திரும்பி வருவேன் என்று கூறி வங்காலையிலிருந்து யாழ் சென்றார் அருட்சகோதரி வலன்ரைன். நாட்கள் 15 கடந்து விட்டன. சகோதரி வருவார் என எதிர்பார்த்திருந்த எமக்கு வைகாசித் திங்கள் 15ம் நாள் காற்றிலே கலந்து வந்த செய்தி – அதுதான் அருட்சகோதரி வலன்ரைன் இறைபதம் சேர்ந்து விட்டார் - என்ற செய்தி ஆச்சரியத்தை அளித்தது ஒரு சில நாட்கள் சுகயீனம் காரணமாக யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எம் சகோதரி இறைவனின் அழைப்பை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார் என்பதே உண்மை.

சகோதரியின் வாழ்வைப் பின்னோக்கிப் பார்க்கிறோம்...! தான் வாழ்ந்து பணியாற்றிய இடங்களிலெல்லாம், எவ்வேளையிலும் முகத்திலே புன்முறுவல் தவழ, தான் சந்திப்பவர்கள் ஒவ்வொருவரிடமும் மகிழ்ச்சியுடன் உரையாடி, அன்பைப் பகிர்வதில் இவரை மிஞ்சியவர் யாருமில்லை என்று கூறலாம். சிறுவருடன் சிறுவராக, இளைஞருடன் இளைஞராக முதியோருடன் முதியோராக - அவரவர் நிலைக்கேற்பத் தன்னை மாற்றியமைத்து, எல்லோருக்கும் எல்லாமாக வாழ்ந்தார். இளம் துறவிகள், இளம் குருக்களை வழிநடத்தி, அறிவுரை கூறி, அவர்களது வாழ்வையும், பணியையும் உறுதிப்படுத்துவதில் வெற்றி கண்டவர். பக்தி, செபம், சேவை, பாசம், மகிழ்ச்சி, புரிந்துணர்வு, விசுவாசம் இவற்றினால் உள்ளங்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டவர். இவர் ஓர் சிந்தனைச் சிற்பி, ஆங்கில நூல்கள் என்ன, தமிழ் நூல்கள் எனன எவைதான இவரது கைக்கு எட்டினாலும் உடனே அவற்றை ஆற அமர வாசித்து விமர்சனக் கண்ணோட்டத்தில் நோக்கி, மற்றவர்களோடு அது பற்றிக் கலந்துரையாடுவார்.

இத்தனைக்கும் இலக்கணமான எம் சகோதரி விசுவாசத்தின் விளைநிலமான தீவுப்பகுதியில் அமைந்துள்ள ஊர்காவற்துறையில் 7.7.1924ம் ஆண்டு திரு. திருமதி மனுவல் தம்பி அவர்களின் மூன்று புத்திரர்களில் இரண்டாவதாகப் பிறந்தார். இவர்களது பெற்றோர் ஆசாரம் தவறாத சிறந்த கத்தோலிக்கர். பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையில் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள். இவர்களின் மூத்த புதல்வி அருட்சகோதரி பெனிக்னா இறையழைப்புக்குச் செவிமடுத்து திருக்குடும்ப சபையில் தன்னை இணைத்துக்கொண்டார். அடுத்த புத்திரியாகிய சகோதரி வலன்ரைன் ஊர்காவற்துறை, இளவாலை ஆகிய இடங்களில் தனது பாடசாலைக் கல்வியை முடித்தபின் இளவாலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து பயிற்றப்பட்ட ஆசிரியையாக வெளியேறினார். அப்பொழுதுதான் இறையழைப்பு இவருள் முளைவிட்டது. தன்னை அழைக்கும் இறைவனின் குரலை இனம் கண்ட இவர் தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்த தந்தையிடம் விடைபெற்று நவத்துறவியர் இல்லம் நாடினார். இரண்டு வருட துறவறப் பயிற்சியின் பின்னர் 18.12.1948ல் தனது முதல் அர்ப்பணத்தைச் செய்தார். இவர்களது ஒரே சகோதரனாகிய திரு. லீனஸ் இவர்களது வாழ்வின் அதி உன்னத தாக்கத்திற்கு உட்பட்டு திருக்குடும்ப சபை பொதுநிலை அங்கத்தவராகத் தன்னை அர்ப்பணித்து இவ்வருடம் தனது 25ம் வருடத்தை நிறைவு செய்கிறார். தனது பாரிய குடும்பப்பணியின் மத்தியிலும் பொதுநிலை அங்கத்தவரின் ஊக்குவிப்புப் பணியில் முழுமூச்சாக ஈடுபடும் இவர் தற்பொழுது திருக்குடும்பசபை பொது நிலை அங்கத்தவர்களின் ஆசியத் தலைவராகப் பணிபுரிகிறார்.

எம் சகோதரி வலன்ரைன் இளவாலை, யாழ்ப்பாணம், வங்காலை, பேசாலை, வவுனியா, மயிலிட்டி, ஆகிய இடங்களில் பாடசாலை அதிபராகவும், குழுத்தலைவியாகவும் பணியாற்றினார். இவரது இறுதிப் பணித்தளமான வங்காலையில் மூன்று தடவைகள் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது வாழ்வின் அடிநாதமாக அமைந்தது விசுவாசம், மகிழ்ச்சி. இவரது பணியின் மையமாக அமைந்தவர்கள் ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர். எம் சபை வாழ்வில் நிறைந்த அறிவும், அனுபவமும் கொண்டவர். இவரது வாழ்வைப்பார்த்தே சபை ஒழுங்குகளை எழுதலாம். செபவாழ்வு, குழுவாழ்வு, சகோதரத்துவ வாழ்வு - இவைதான் இவரது உயிர்மூச்சு, இளைய தலைமுறையினருக்குச் சபை வாழ்வைப்பற்றி இனிமையாகச் சொல்லி சுவையூட்டுவார். சபை வளர வேண்டும், மலரவேண்டும், வாழவேண்டும் - இதுவே இவரது தாரக மந்திரம்.

ஆம், எம் சகோதரி எம்முடன் வாழ்ந்த அந்த நாட்களை மறக்க முடியுமா? சகோதரி அவர்களே, நீங்கள் உங்கள் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்து விட்டீர்கள், உங்கள் தடங்கள் எங்களுக்கு உதவட்டும், உங்கள் வாழ்வு எங்களுடன் ஒவ்வொரு கணமும் பேசிக்கொண்டேயிருக்கிறது. உங்கள் ஆன்மா என்றும் இறைவனில் சாந்தி பெறட்டும்.

வங்காலைச் சகோதரிகள்.

# இளைஞர் பொழிவு

## சிரிக்க சிந்திக்க

### இப்படியும் மனிதர்கள் ....!



நெடுநாள் தவமிருந்தான் மனிதன் இறுதியில் இந்த இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு வைகாசி மாதம் இறைவன் காட்சி தந்தார். "நீ யாரப்பா?" என்றார் இறைவன். "நான் ஒரு வக்கீல் - சட்டத் தரணி" என்றான் மனிதன். "ஒகோ வழக்காளி எதிராளி சாட்சிகளிடம் என்னைச் சாட்டி சத்தியம் வாங்குபவர்கள் நீங்கள்தானே" என்றார் கடவுள். "ஆமாம் கண்டு கொண்டீர்களே" என்று பௌவியமாக பல்லிளித்தான் வக்கீல். "முதலில் நீங்கள் அல்லவா புத்தகத்தில் சத்தியம் செய்ய வேண்டும்" என்றார் கடவுள் கடுமையாக. "நாம் யாவரும் இன்புற்றிருக்க நினைப்பதன்றி வேறொன்றும் அறியோம் பராபரனே" என்றார் வக்கில். "சரி இப்போ என்ன வேண்டும்" என்றார் இறைவன். "ஆனால் நீ கேட்பதன் இருமடங்கு உன் நண்பர்கள் இன்புற்றிருக்க அவர்களுக்குக் கிடைக்கும்" என்றார் கடவுள். "அதுதானே என் ஆனந்தம்" என்றார் வக்கில். "சரி கேள்" என்றார் இறைவன். "உலகிலே விலையுயர்ந்த ரோட்ரொய்ஸ் காரும் ஒரு கோடிப் பவுணும் வேண்டும்" என்றார் வக்கில். "மறவாதே உன் நண்பருக்கு இதன் இருமடங்கு கிடைக்கும்" என்றார் இறைவன். "ஆனந்தம்" என்றார் வக்கில். அதன்பின் வக்கில் பேசினார். வாதத்திறமையால் இறைவனை வெல்ல எண்ணம் கொண்டார். "இறைவா உன் படைப்பில் ஒரு மூளை, ஒரு இதயம், ஒரு குடல் தந்தாய். காற்று வாங்க இரு சுவாசப்பை தந்தாய். ஆனால் ஒரு சிறு நீரகம் போதுமாய் இரண்டை ஏன் தந்தாய்.? ஒன்றை எடுத்துவிடு" என்றார் வக்கில் பவ்வியமாக. இந்தத் தடவை இறைவன் பேச்சு மூச்சற்றுப் போனார். சொன்ன இரு கார் இருகோடிப் பவுண் கொடுத்தவர்களின் இரு சீறுநீரகங்களையும் எடுத்துவிட்டால் இருப்பதை அனுபவிக்க யார்தான் உயிரோடு இருப்பார்கள். கலங்கிய கடவுள் காற்றில் கலந்தார்.

மனுவேல் பஸ்ரியன் 3ஆம் குறுக்குத் தெரு, புதுக்கமம்.

### எப்போது காதலிப்பது?

காதல் என்பது அறியா வயதில் வரும் ஆசை. இளம் வயதில் வருவது காதல் அல்ல. உன்னை அழிக்க வந்த உன் எதிரி. காதல் வருவது தவறல்ல. ஆனால் காதலிக்கும்போது நீ என்ன நிலையில் இருக்கிறாய் என்று அறிந்து கொண்டபின் காதலி. அதுவரை உன் நிலையை யோசித்துப் பார். நீ ஒரு மாணவியாக இருந்தால் உன் கல்வியில் சிறந்த மாணவியாக வந்து பெற்றோருக்கு பெருமை தேடிக்கொடுத்தபின் காதலி. அதுவரை பொறுத்திரு. உன் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

எஸ். ரதனி, பள்ளிமுனை, மன்னார்

தொடர் கட்டுரை ~5

# கட்டிளமையும் காதலும்

\- ஈழத்து ஜெகா -

## முடிவுரை 1



பாதைகள் எல்லாம் உரோமையை நோக்கி என்பது பழமொழி. பயணம் எல்லாம் கிளிநொச்சி நோக்கி என்பது நிகழ்கால அரசியல் அந்தரங்கம். கட்டிளமையின் கனவும், நினைவும், நகர்வும், பிடிப்பும், படிப்பும், துடிப்பும் காதல்தான். அவர்கள் உணர்ச்சி ஊஞ்சல் ஆடுகிறது. கடைசியில் அர்த்தமும் அனுபவமும் இல்லாமல் இவர்கள் இட்ட அடைக்கலப் பெயர்தான் காதல். கீதைபோல் காதலும் புனிதமானது. சிலுவைபோல் காதலும் அர்த்தமுள்ளது. காதல் மௌனங்களால் உச்சரிக்கப்படும் புனித வார்த்தை. அது தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்வதுமில்லை. தன்னை முழுமையாக மறைத்துக் கொள்வதுமில்லை. கண்களை அரைகுறையாய்க் கட்டிக்கொண்டு விளையாடும் கண்ணாமூச்சு விளையாட்டு அது. காதல் தீயைப் போன்றது அது பூவைப்போன்றதும் கூட. அது அன்பின் ஆரோக்கியம். இரண்டு உள்ளங்களின் இழப்பிலும் ஈர்ப்பான இணைப்பு. காதல் உணர்ச்சியின் கவர்ச்சியால் பிறந்து அறிவால் வளர்க்கப்பட்டு நம்பிக்கையால் நடைபயில வேண்டும்.

இதுவரை நான் கட்டிளமையும் காதலும் எனும் தலைப்பில் குடும்பம் கல்வி, தொடர்புச்சாதனங்கள் இவற்றின் பின்னணியில் பேசினேன். கட்டிளமையினரின் காதல் கரைசேருமா அல்லது கடல்சேருமா என்று வார்த்தைகளுக்குள் மனசைப் புகுத்தி எழுதினேன். உணர்வுப் பசிக்கு நான் இட்ட இடைக்கால எழுத்துத் தீனிகள் இவை. எனது இதயக் குரங்கின் ஆட்டத்திற்கு இதம் அளித்த வார்த்தைச் சுரண்டல்கள். கட்டிளமையை கட்டிளமையினருக்கு காட்டச்சொல்லி படைத்து வற்புறுத்திய வார்த்தைக் கண்ணாடிகள். ஒவ்வொரு பெண்ணும் ஒரு சதை உயிர், இலக்கியம்! இந்த உலகத்தில் அர்த்த ரீதியான குழப்பங்களின் ஒரே ஓர் படைப்பு பெண் மட்டுமே. அன்றும் இன்றும் என்றும் ஒன்றுமே இல்லை பெண்ணிடம். இல்லை என்ற வரைக்கும் இடைவிடாது எதையோ தேடிக்கொண்டிருக்கும் ஆண் வர்க்கத்திற்கு அளவியல் உழவியல் கலந்த ஊசி. வாழ்க்கையால் விளங்கி விளக்க வேண்டிய விஷயம். இதற்கு எந்நிலையும் சூழ்நிலையும் சுத்தமாய் பச்சைக் கொடி காட்டாது. அனுபவங்களுக்காக காத்துக்கொண்டு இருப்பதைவிட மனித குலம் நேற்றைய அனுபவங்களைக்கூட எனக்காய் தனி உயில் எழுதி வைத்திருக்கின்றது. மனிதன் அனுபவப் பிராணி. அதே நேரம் அனுபவ பிரயாணி. கல்லூரிக்கணிப்பீட்டில் கணிதம் கட்டாயம்போல் கடவுள் திருவிளையாடலில் மயங்கி மனிதன் ஆடும் தெருவிளையாடல். நடக்கும் குழந்தைமுதல் நரைத்த குழந்தைவரை பாலியல் உணர்வுக்கும் செயலுக்கும் உட்பட்டே தீரும். உடைகளை வானிலை தீர்மானிக்கின்றது. உணவை வாழ்க்கைமுறை தீர்மானிக்கின்றது. கலாச்சாரத்தை நிலவியலும், மனவியலும் தீர்மானிக்கின்றது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சங்கப்பாடலை காதல் சங்கிலே ஊதி தள்ளுகின்றார். குடும்பம், பொருளாதாரம், அந்தஸ்து, மதம், சாதி, இனம், நாடு என்ற கோடுகளைக் கடந்து சர்வதேசக் காதலர் புலம்பெயர்ந்த ஈழத்துத் தமிழர்போல் அகதி அந்தஸ்த்துக்கு அனுமதி கோருகின்றார்கள்

(இத்தொடர் அடுத்த இதழில் நிறைவு பெறும்)

### அருட்சகோதரிக்கு வங்காலை மக்களின் அஞ்சலி

வங்காலை திருக்குடும்ப மடத்தில் நீண்டகாலமாக ஆசிரியராக அதிபராக மடத்தலைவியாக பணியாற்றி சிறுவர் முதல் முதியோர் அனைவரையும் நன்கு அறிந்து ஆன்ம பணிபுரிந்து எல்லோராலும் போற்றப்பட்ட அருட்சகோதரி வலன்ரைன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது ஆன்மா இறையரசில் இன்புறவும் அவரை இழந்து வருந்தும் அன்புச் சகோதரன் திரு. ம. லீனஸ் (திருக்குடும்ப பொதுநிலையினர் தேசியத் தலைவர்) மற்றும் சகோதரர் சகோதரரிகள் அறுதல் பெறவும் இறையருள் வேண்டுகின்றோம்.

\- ஆசிரியர் அந்தோனி லெம்பேட்

### திருமறைக்கலாமன்றத்தின் சமாதான நிகழ்வு ...

12ம் பக்கத் தொடர்ச்சி

முதல் நாள் கலைவிழாவிலே பிரபல நடன இயக்குனர் திருமதி மிராண்டா கேமலதாவின் சிங்கள நடனங்களும், கேமலதா அபேசிங்காவின் "தொப்பி வியாபாரி" என்கின்ற சிறுவர் நாடகமும் பிரபல ஈழத்து கவிஞன் புதுவை அன்பனின் "கரைதேடும் ஓடங்கள்" நாடகமும் இலங்கையின் பிரபல திரைப்பட இயக்குனர்கள் திரு. வசந்த ஒபயசேகர அவர்களின் சிங்கள திரைப்படம் ஒன்றும் இயக்குனர் திரு. ஜெறோம் டி சில்வா அவர்களின் "Look at me" என்கின்ற ஆங்கில நாடகமும் எமது கலைஞர்களை மட்டுமல்ல அங்கு இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வருகை தந்த திருமறைக் கலாமன்றத்தின் உறுப்பினர்களையும் சுமார் 1500 உறுப்பினர்களையும் கவர்ந்தது. அவ்வாறே இரண்டாம் நாள் சிறுவர்களுடைய நிகழ்வுகள் இடம் பெற்றன. காலை மண்டபத்திலே சிறுவர் பாடல்கள், சிறுவர் விளையாட்டுக்கள், சிறுவர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் என்பன நடைபெற்றன.

எமது பிரதேசத்திலிருந்து சென்ற எமது மன்னார் மன்ற சிறுவர்கள் சுமார் 45 பேர் இதில் கலந்துகொண்டனர். அன்று மாலையிலே நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்திலே இலங்கையின் சகல பாகங்களிலுமிருந்து வருகை தந்த சகல சிறுவர்களும் கலந்து கொண்டதோடு அவரவர் பாரம்பரிய கலைவடிவங்களும் (உதாரணமாக காவடி, கோலாட்டம், கரகாட்டம், கண்டிய நடனம்) ஊர்வலத்தில் இடம்பெற்றன. மன்னார் திருமறைக் கலா மன்றத்தின் பேசாலை சிறுவர் கலைக்கூட சிறுவர்கள் வழங்கிய கரகாட்டமானது ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவரது பாராட்டையும் பெற்றது. அன்றிரவு யாழ் திருமறைக்கலாமன்ற அரங்கிலே சிறுவர்களின் கலை வடிவங்கள் அரங்கேற்றம் பெற்றது. அதில் மன்னார் திருமறைக்கலா மன்றத்தின் தாழ்வுபாடு சிறுவர் கலைக்கூட சிறுவர்கள் வழங்கிய "துரோணர்" என்ற நாட்டுக்கூத்து மேடையேறியது. அதுவும் இயக்குனர் அடிகளாரின் சிறப்பான பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதி நாள் நிகழ்வுகள் மாநாடாக அமைந்தது. மன்றத்தின் கடந்த காலங்கள், பாதைகள் குறிக்கோள்கள் ஆராயப்பட்டன, அன்றைய மாலை நிகழ்வுகள் மன்ற அரங்கில் நடைபெற்றன. அங்கு ஒவ்வொரு திருமறைக்கலா மன்றங்களுக்கும் கூடாரங்கள் வழங்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களை அந்தந்த கூடாரங்களிலே பிரதிபலிக்குமாறு கேட்கப்பட்டனர். அந்த வகையிலே மன்னாரின் கடல், நெல் வளங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மன்னார் கூடாரம் பல பத்திரிகையாளர்களினதும், செய்தியாளர்களினதும் ஏனைய மன்ற உறுப்பினர்களினதும் கவனத்தை அதிகமாக ஈர்த்தது. அதைத்தொடர்ந்து மேடையேறிய இறுதி இரா கலை நிகழ்வுகளில் மன்னார் மன்றத்தின் வங்காலை இளைஞர் வழங்கிய "அபிமன்யூ வதை" என்கின்ற நாட்டுக்கூத்து பல கலைஞர்களின் வரவேற்பைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

கே. தாயில் சிறந்த கோவில் இல்லை என்று கூறுகிறார்களே பெரியப்பா, அப்படியென்றால் நாம் கோவிலுக்கு செல்வது வீணா?

*செல்வி. R. துஷித்தா குரூஸ், யூட்ஸ் வீதி, பேசாலை.*

ப. இப்பழமொழி தாயின் மேன்மையை வலியுறுத்தச் சொல்லப்பட்டதே அன்றி கோவிலின் மகிமையை குறைத்து மதிப்பிடுவதற்காக சொல்லப்படவில்லை.

கே. ஓர் ஆணும் பெண்ணும் பேசிக்கொண்டால் கதை கட்டும் சிலரை என்ன செய்வது?

*அ. தர்ஷினி பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப. நமது ஊர்கள் இன்னும் அமெரிக்காவாகவோ, இங்கிலாந்தாகவோ மாறவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கே. குயிலின் குரலை இறைவன் மயிலுக்குக் கொடுத்திருந்தால்?

*தீபன், கொழும்பு.*

ப. மயிலின் தோகை குயிலுக்கு போயிருக்கும்.

கே. அன்புள்ள பெரியப்பா, உயிரான நண்பரும்கூட திருமணம் முடித்த பின்பு தங்கள் நட்பை மறந்து விடுகின்றனர் ஏன் பெரியப்பா?

*ப. உதயராணி, சகாயவீதி, அடம்பன்*



ப. திருமனம் முடித்த பின்னர் உங்கள் நண்பரோ நண்பியோ உங்கள் நட்பையே மறந்து விட்டார் என்றால் அவர் - அவள் தனது துணையோடு மிகவும் பிஸியாக உள்ளார் என்றுதானே அர்த்தம். அவர் தனது துணையோடு ஒன்றித்து மகிழ்ந்திருக்கட்டும் "கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்".

கே. நாய் கடித்தால் விசம் என்கிறார்கள் மனிதன் கடித்தால் விசம் இல்லையா? பெரியப்பா?

*அ. சுஜி, நறுவிலிக்குளம்.*

ப. இதைப் பற்றி எனக்கு சரியாக சொல்லத் தெரியாது. மனைவிமாரிடம் கடி வாங்கிய கணவன்மாரை விசாரித்துப் பாருங்கள் தெரியவரும்...! இப்ப நீங்கள் கடிக்கிறது எனக்கு விசம் ஏற்றும்போல இருக்கிறதே.....!

▣ கே. அன்பிய வாழ்வு மூலம் குடும்பங்களில் ஒற்றுமை நிலவுமா?

*பியூமிக்கா பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.*

ப. நிலவும். நிலவ வேண்டும். இந்தக் கேள்விக்கு பின்னால் உள்ள உங்கள் மன ஆதங்கத்தை நான் புரிந்து கொள்கிறேன். அன்பியம் என்பது ஒரு வாழ்வு முறை. உண்மையான உறவில் - அன்பில் - ஒற்றுமையில் கட்டியெழுப்பப்பட வேண்டிய வாழ்வு. ஆனால் நடைமுறையில் நாம் பார்ப்பது என்ன? அருகருகே உள்ள குடும்பங்கள் ஒற்றுமையாக இருப்பதுதானே கஸ்ரமான காரியம். இந்த வீட்டுக் கோழி அந்த வீட்டுக்கு போய் முட்டை இட்டால் அது திரும்பி வராது. அந்த வீட்டு மழைத்தண்ணி இந்த வீட்டுக்கு வந்தால் சண்டை. இந்த வீட்டு மரத்து இலை அந்த வீட்டு முற்றத்தில் விழுந்தால் வாய்த்தர்க்கம். இந்த சில்லறைப் பிரச்சினைகள் அனைத்திற்கும் அன்புதான் தீர்வு. அன்பினால் தீர்க்கப்படாத பிரச்சினைகளை எந்த நீதிமன்றத்தாலுமே தீர்க்கமுடியாது.

கே. படிக்கின்ற பிள்ளைகள் வானொலி கேட்கக்கூடாதாம் என்று சொல்கிறார்கள் இது சரியா? பிழையா? இது பற்றி உங்கள் ஆலோசனை என்ன பெரியப்பா?

*சீ. டொறின், புனித இராயப்பர் ஆலயம், வஞ்சியன்குளம்.*

ப. அளவோடு இருந்தால் அனைத்தும் ஆனந்தமே.

கே. பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு பணிந்து நடங்கள் என்று கூறுகின்றார்கள் ஆனால் தற்போதைய காலத்தில் பெற்றோர்தான் தங்கள் பிள்ளைகளுக்கு பணிந்து நடக்க வேண்டியுள்ளது இதில் உங்கள் கருத்து என்ன?

*ப. வதனா, வாழ்கை பெற்றான் கண்டல்.*

ப. பெற்றோர் பெற்றோராக இருந்தால் பிள்ளைகள் பெற்றோரின் இடத்தை எடுக்க மாட்டார்கள். எடுக்க முடியாது.

கே. பெரியப்பா எனது இதயமோ சிறிய இதயம். நான் யாரைத் தேடுவது? *டெ. பிரபு பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப. முதலில் சத்திர சிகிச்சை மூலம் உங்கள் இதயத்தை பெரிதாக்குங்கள். அப்போதுதான் அது அனைவரையும் அன்பு செய்யும் பெரிய இதயமாகும்....!

கே. பொய் சொல்பவனுக்கு ஏற்படும் மிகப்பெரிய கெடுதல் எது?

*மாலதி, அடம்பன்.*

ப. அவன் உண்மை பேசும்போதுகூட யாரும் நம்பமாட்டார்கள் என்பதுதான்.

கே. விரோதிகளை மன்னிக்கலாமா? தண்டிக்கலாமா?

*அழகரசன், யாழ்ப்பாணம்.*

ப. விரோதிகளை விட்டு வைக்கக் கூடாது. அவர்களை ஒழித்துக் கட்டியே தீர வேண்டும். அதற்கு சுலபமான ஒரு வழி, அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுவதுதான்....!

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# நீங்காத நினைவுகள்

5ஆம் ஆண்டு நினைவு



மலர்வு 18 - 07 - 1942
உதிர்வு 01 - 01 - 1998

**நோபேட் அல்போன்ஸ்**
**தலைமன்னார்**

8ஆம் ஆண்டு நினைவு



மலர்வு 05 - 11 - 1974
உதிர்வு 06 - 11 - 1995

**இ. அ. ரவீந்திரக்குமார்**
**பாபு - தலைமன்னார்**

மண்ணிலே நீங்கள் இருவர் மறைந்தாலும்
அன்போடு எமை வளர்த்த நாட்கள் எம் மனத்திரையில் விழுதே!
வசந்தம் கமழும் பூக்களாய் அமைதி கொண்ட சுபாவம்!
கோபமது கொள்ளா நேயம்! இரக்கம் கொண்ட நல் இதயம்!
அன்பு கொண்ட உள்ளம்! எதையும் தாங்கும் இதயமாய் வாழ்ந்தீர்கள்.
உங்கள் இருவரையும் எம்மால் மறக்க முடியவில்லையே
காலத்தின் முடிவுரையில் இறைவனடி கலந்து விட்டீர்கள்.
பிரிந்து விட்ட எம் உறவு மறவாது உங்களை.
உங்களது ஆன்ம சாந்திக்காகவும் விண்ணிலே இறைவனோடு வாழவும்
என்னாளும் வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
திரு.ச. சிங்கராயர் குருஸ், திருமதி சாராள் லியோன்,
அருட்சகோதரி தியோப்பின் (றெம்சி) கொன்சி, ஜென்சி
சௌமி. தலைமன்னார்

## உங்கள் சிறந்த அன்பளிப்பு - மன்னா -

### "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர் - நண்பரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 200யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 1000யும் (10 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின் வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd. Mannar பணம்பெறுபவர் பெயர்: the Editor – MANNA. வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 02 – 1678001 - 5 என்று குறிப்பிடவும்.

## அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான 5நாள் வதிவிடப்பயிற்சி

3ம் பக்கத் தொடர்ச்சி

மூன்றாம் நாள் பயிற்சியின்போது எம்மாவுஸ் அனுபவம், குடும்பங்களை சந்தித்தல், நோயாளரை சந்தித்தல், சமூக ஈடுபாடு போன்றவற்றை மையமாகவைத்து அன்பிய மத்திய குழு உறுப்பினர்களால் செயல்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியானது ஊக்குவிப்பாளர்களுக்கு மேலும் தெளிவையும், பணியார்வத்தையும் எப்படி அன்பியங்கள் தாங்கள் சார்ந்திருக்கின்ற இடத்திலே பணியாற்றலாம் என்னும் தெளிவையும் கொடுத்தது.

நான்காம் நாள் பயிற்சியில் சிறப்பம்சமாக இலங்கை அன்பிய தேசிய செயலக இயக்குனர் அருட்தந்தை றொகான் டோமினிக் அவர்களும், பயிற்சிகளுக்குப் பொறுப்பான திருவாளர் நிமால் அவர்களும் வருகைதந்து மிகவும் பயனுள்ள முறையிலே பயிற்சிகளை வழங்கினர். பங்குகளில் இணைப்பாளர்கள் பணியாற்ற வேண்டிய தளம், அவர்களின் அணுகுமுறை, சமூக ஈடுபாடு போன்ற செயல்முறைப் பயிற்சிகளை சிறப்பாக வழங்கினர்.

ஐந்தாம் நாள் நிகழ்வாக மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் அவர்கள் வருகை தந்து திருப்பலியை நிறைவேற்றி ஊக்குவிப்பாளர்களை உற்சாகப்படுத்தினார்.

இவ்வாண்டு திருச்செபமாலை ஆண்டாக நம்முடைய திருத் தந்தை அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதை நாம் அறிவோம். இந்த அழைப்பிற்கு அன்பிய ஊக்குவிப்பாளர்களாகிய நாமும் மதிப்பளித்து , அன்னை மரியாளின் பரிந்துரையில் நம்பிக்கைகொண்டு திருச் செபமாலைப் பவனியொன்றை ஐந்தாம் நாள் மாலையில் நடாத்தினோம்.

அன்றிரவு அன்பிய இணைப்பாளர்கள் எல்லோரும் தங்களை நற்கருணை நாதருக்கு முன்பாக அர்ப்பணித்து, செபித்து ஆவியின் அருட்பொழிவைப் பெற்ற அனுபவம் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் ஒரு மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது. ஈற்றில் கலை நிகழ்சிகளுடனும் 19.05.2003 காலைத் திருப்பலியுடனும் தொடர் பயிற்சி நிறைவு பெற்றது.

இந்தப் பயிற்சியின் வெற்றிக்காகவும், நிறைவுக்காகவும் தொடக்க நாள்முதல் இறுதி நாள்வரை 24 மணி நேரமும் எமது தொடர்பக சிற்றாலயத்தில் நற்கருணை நாதர் எழுந்தேற்றம் செய்யப்பட்டு நேர அடிப்படையில் பங்குகளில் இருந்து வந்த அன்பிய ஊக்குவிப்பாளர்கள் செபித்த திரு நிகழ்வு மிகவும் உன்னதமான ஒன்றாக அமைந்திருந்தது.

இந்தப் பயிற்சிக்கு மறைமாவட்டத்திலுள்ள பல பங்குகள் தங்களுடைய பங்கில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களையும், ஏனைய . பொருட்களையும் வழங்கினார்கள்.

*எழுத்துருவாக்கம் - செல்வி யே. கி. சுவர்ணா,*
*அன்பிய ஊக்குவிப்பாளர், வஞ்சியன் குளம்.*

## நீங்காத நினைவுகள் பற்றிய அறிவித்தல்


நீங்காத நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு, (அதாவது இறந்தவரின் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாதம், இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவிதை அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 750 ஆகியவற்றை அனுப்பிவையுங்கள்.

தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம். (பதிப்பாசிரியர்)

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம்
உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின்
உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.
அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில்
புதுப்பித்துக்கொள்ளுங்கள்.
மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 1000 (10 யூரோ)

## அனைத்துத் தொடர்புகளுக்கும்



மன்னா பத்திரிகைப் பணியகம் நிரந்தரமாக மன்னார் திருமறைப்பணி நிலையத்திற்கு வருவதனால் இனி வரும் காலங்களில் கீழே உள்ள முகவரியோடு மட்டுமே தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். வதிவிட முகவரியாக இருந்த தலைமன்னார் முகவரிக்கு தொடர்புகொள்ள வேண்டாம் என அன்போடு கேட்டுநிற்கின்றோம்.

| | |
|---|---|
| பதிப்பாசிரியர், | The Editor, |
| மன்னா | MANNA |
| திருமறைப்பணி | Pastoral Centre, |
| நிலையம், | St. Sebestian's Street |
| புனித செபஸ்ரியார் வீதி | Mannar, |
| மன்னார். | Sri Lanka. |

தொலைபேசி : 023 - 2232377

## பெரியப்பா பதில்கள்

பலர் இப்பகுதிக்கு உப்புச் சப்பற்ற கேள்விகளை அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பிவிட்டு "ஏன் எனது கேள்வியை பிரசுரிக்கவில்லை?" என முறையிட்டு கடிதங்கள் எழுதுகிறார்கள்.

உங்கள் கேள்விகள் தரமானதாக - அறிவுத்தேடல் நிரம்பியதாக - நகைச் சுவையாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். அப்படி இல்லாத கேள்விகளை பெரியப்பா நிராகரித்துவிடுவார். (பதிப்பாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.14
## திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகம்

உங்கள் விடைகளை 20. 7. 2003 க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். சரியான விடைகளை எழுதியோரில் 50 பேர் பாராட்டுக்குரியோராகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | * | | 03 | | 04 | | | | |
| | 05 | | | | | | * | | | |
| | * | | | 06 | | | 07 | | 08 | |
| | 09 | | | * | | | | | | |
| * | 10 | | | 11 | | | | | | 12 |
| | | | | | 13 | | | 14 | | |
| | | 15 | | | | | 16 | | | |
| | | | | 17 | | | | . | 18 | * |
| | | | | | 19 | | | | | 20 |
| 21 | | 22 | | | | 23 | | | | |

### மேலிருந்து கீழ்
1 அப்பொழுது கடவுளின் பெயரும், போதனையும் ................லுக்கு உள்ளாகாது.
2. தங்களது வருங்காலத்திற்கென்று நல்லதோர் அடித்தளமாக இச்செல்வத்தைச் சேமித்துவைப்பதால் உண்மையான .............. அடைய முடியும்.
4. ஆனால் ............எல்லாவகையிலும் பயன்தரும் (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
7. அவசரப்பட்டு யார் மேலும் கைகளை வைத்துத் திருப்பணியில் ......................
8. இறைப்பற்று பெரும் ............... தருவதுதான். (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
10. இறைப்பற்றும் ..............நிறைந்தவர்களாய், தொல்லையின்றி அமைதியோடு வாழ.
13. இறைவாக்கு உரைத்து மூப்பர்கள் உன்மீது கைகளை வைத்துத் ........யில் அமர்த்தியபோது உனக்கு அளிக்கப்பட்ட அருட்கொடையைக் குறித்து அக்கறையற்றவனாய் இராதே.

### கீழிருந்து மேல்
5. அலகையின் ...................யிலும் விழ நேரிடலாம்.
8. பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும்...............
12. நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மனஉறுதி ................ ஆகியவற்றை நாடித் தேடு.
13. ................ நேர்மையானவர்களுக்காக இயற்றப்படவில்லை.
14. இவற்றைச் சகோதர சகோதரிகளுக்கு எடுத்துக் கூறினால் நீ கிறிஸ்து இயேசுவின் நல்ல ...................இருப்பாய்.
21. எனக்கு .............ம் நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறேன்.
23. அவர்கள் .................ச் செய்து நற்செயல்கள் என்னும் செல்வத்தைச் சேர்ப்பார்களாக.

### இடமிருந்து வலம்
1.தம் பிள்ளைகள் ............ மிகுந்த கண்ணியத்துடனும் வளர ஆவன செய்பவராக இருக்க வேண்டும்.
4. இது .....................யிலும் மறுமையிலும் நாம் வாழ்வு பெறுவோம் என்னும் வாக்குறுதியைக் கொண்டுள்ளது.
5. சிலர் இம் மனச்சான்றை உதறித் தள்ளி விட்டதால் விசுவாசம் என்னும் ....... உடைந்துபோகச் செய்தனர்.
9. இத்திருச்சபை உண்மைக்குத் ..................... அடித்தளமுமாய் இருக்கிறது.
13. ஏனெனில் நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் .................ல் அமர்த்தினார்.
15. கடவுளுக்கும் மனிதருக்கும் ..................... இணைப்பாளரும் ஒருவரே.
16. நீ இளைஞனாய் இருப்பதால யாரும் உன்னைத் ...................க் கருதாதிருக்கட்டும்.
22. திருச்சபையில் புதிதாகச் சேர்ந்த ஒருவர் ....................ப்பாளராகக் கூடாது.
23. இந் நலந்தரும் போதனையே பேரின்பக்கடவுள் என்னிடம் ஒப்புவித்திருக்கிற சீர்மிகு .....................

### வலமிருந்து இடம்
2. ஏனெனில் கடவுளின் .................... நமது மன்றாட்டும் அதைத் தூய்மையாக்கும்.
3. இல்லாவிட்டால் அவர் ........................ சொல்லுக்கு ஆளாகலாம்.
6. ......... கடவுளை எதிர்நோக்கி இருப்பதால் தான் நாம் வருந்தி உழைத்து வருகிறோம்.
11. இறைவாக்குகளைத் .........க் கொண்டு நம்பிக்கையுடனும், நல்மனச்சான்றுடனும் நன்கு போராடு.
13. நன்கு ...................... ஆற்றுவோர் உயர்மதிப்புப் பெறுவர்.
17. அந்த இறைவாக்குகளைத் துணையாகக் கொண்டு, நம்பிக்கையுடனும், நல்மனச்சான்றுடனும் ...................... போராடு.
18. முதியோரிடம் கடுமையாய் ......................
19. குறித்த காலத்தில் அதற்குச் சான்று ...................... தார்.
20. இயேசுக் கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையைக் குறித்து அதிகத் ................பேசுவர்.

# மன்னா விநியோகம் செய்வோர் விபரம்

பல இடர்பாடுகளின் மத்தியில் மன்னா பத்திரிகையை பங்குகளில் விநியோகம் செய்யும் எமது அபிமானத்திற்குரிய மன்னாப் பணியாளர்களின் விபரங்களை நன்றியோடு பிரசுரிக்கின்றோம். இவர்கள் எமது பாராட்டுக்கு உரியவர்கள்.

## ஆட்காட்டிவெளி பங்கு
வண்ணாகுளம் - அ. கிறேஸ்
கறுக்காக்குளம் - அ. சகாயறஞ்சினி
காத்தான் குளம் - றூஜி வரோவனிக்கா
கள்ளியடஞ்சான் - திருமதி. மிக்கேல்பிள்ளை
ஆலங்குளம் - திருமதி. திருஞான தீபன்
பாலை பெருமாட்கட்டு - திருமதி. டபரேரா
குருவில் வான் - சிந்தாத் துரை J.P
பாலையடிப் புதுக்குளம் - றீற்றா சிலோஜினி
அடம்பன் தாழ்வு - திருமதி. ஜெயந்திரன்
பாசி மோட்டை - ச. சுதா -
ஆண்டான்குளம் - ச. ஜெகாவினோதரன்
ஆட்காட்டிவெளி - சாந்தா, றொசான், ஜான்சி.
குமானாயன்குளம் -சந்தான் (ஜெனி, சோபா)
சாளம்பன் - புஸ்பம்
பரப்புக் கடந்தான் - திரு. பிரான்சிஸ்

*ஆட்காட்டிவெளிப் பங்கில் திரு. சூசைநாயகம் அவர்கள் மன்னா விநியோகத்திற்கு பொறுப்பாக இருந்து அரும்பணி ஆற்றுகிறார். அன்னாருக்கு எமது நன்றியும் பாராட்டுக்களும்.*

## தாழ்வுபாடு பங்கு
தாழ்வுபாட்டுப் பங்கில் செல்வி சின்னத்தம்பி பாக்கியம் அவர்களின் சிறப்பான தலைமையிலும் வழிநடத்தலிலும் பீடப்பணியாளர்கள் விநியோகம் செய்கின்றனர்.

## பட்டித்தோட்டம்
செல்வி வளர்மதி

## பாப்பரசர் பணியில் 25 ஆண்டுகள் நிறைவு
## பல்வேறு மட்டத்தில் சாதனை!
(1ம் பக்கத் தொடர்ச்சி)



திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 2003 சித்திரை 24ம் திகதி அன்று அதிக ஆண்டுகள் பணி புரிந்த நான்காவது திருத்தந்தையானார். அன்றைய தினமன்று 1700ம் ஆண்டுகளில் 24 ஆண்டும் 6 மாதங்களும் ஒரு வாரமும் திருத்தந்தையாக இருந்த பாப்பாண்டவர் 6ம் பயசை இவர் தாண்டினார். திருச்சபையில் அதிகமான ஆண்டுகள் திருத்தந்தையாக இருந்ததில் 3வது இடத்தைப் பெறுபவர் பாப்பரசர் 13வது லியோ, அதாவது 13வது சிங்கராயர். இவர் 1878 முதல் 1903வரை 25 ஆண்டுகளும் 5 மாதங்களும் பணி செய்தார். கடந்த மார்ச் மாதம் 2ம் அருள்சின்னப்பர் இந்த மூன்றாவது இடத்தைத் தாண்டியுள்ளார். எதிர்வரும் அக்டோபர் 9ம் திகதி இவர் பாப்பிறைப் பணியின் வெள்ளி விழாவை கொண்டாடுகிறார் திருத்தந்தை. இரண்டாவதாக அதிக ஆண்டுகள் பணி செய்தவர் பாப்பரசர் 9ம் பயஸ். முதல் இடம் புனித பேதுரு என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரிசுத்த பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பர் தனது 100ஆவது வெளிநாட்டு விஜயமாக வியாழக்கிழமையன்று குரோஷியா சென்றார்.


ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு தற்போது குரோஷியா சென்றிருக்கும் பாப்பரசர், வத்திக்கான் திரும்பும் தினத்துடன் அவர் பதவியில் அமர்ந்து 8972 நாட்கள் முடிவடைகின்றன. றோமன் கத்தோலிக்க திருச்சபையின் 2000 ஆண்டுகால வரலாற்றில் பாப்பரசராக அதிக காலம் பதவி வகித்தவர்கள் பட்டியலில் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நான்காவது இடத்தை வகிக்கிறார். வத்திக்கான் புள்ளி விபரங்களின் பிரகாரம் பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர் தனது 100 வெளிநாட்டு விஜயங்களில் 129 நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களின்போது 2,399 சொற்பொழிவுகளை ஆங்காங்கே நிகழ்த்தியிருக்கிறார்.

எல்லாமாக வெளிநாட்டு சுற்றுப் பயணங்களில் 1,160,113 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்திருக்கிறார். இது பூமியின் சுற்றளவைப்போல் 29 மடங்கு அல்லது பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்தின் மூன்று மடங்கைவிட அதிகமானதாகும்.


## *புதிய கணனிப் பயிற்சி நெறி*
## *DIS (Diploma In Computer studies)*





அன்பார்ந்த மாணவர்களே!

கணனிப் பயிற்சிகளில் Microsoft word, Microsoft Excel ஆகிய பாடங்களைப் படித்து அலுத்துவிட்டதா?

இதோ உங்களுக்காக வாழ்வுதயம் கணனிப் பயிற்சி நிலையம் ஓர் வித்தியாசமான கணனிப் பயிற்சியினை மன்னார், நானாட்டான், செட்டிகுளம் ஆகிய பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சியானது கணனி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கும் BIT, NCC போன்ற பயிற்சிகளுக்கும் ஓர் அடிப்படைப் பயிற்சியாக அமைவது இதன் சிறப்பம்சமாகும். இது பின்வரும் 7 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- *Fundamentals Of Information Technology – 1*
- *Operating Systems And Packages.*
- *Programming*
- *Event Driven Programming With Visual Basic*
- *Internet Programming ( HTML, JAVA)*
- *Fundamental Of Information Technology – 2*
- *Project Works*

- *பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் மேலும் தொடர் பயிற்சிகளும் வழங்கப்படும்.*
- *பயிற்சியின் காலம் 5 மாதங்கள்*
- ***Word, Excel** போன்ற பயிற்சிகளை நிறைவு செய்தவர்களும் வேறு பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களும் இணைந்துகொள்ளலாம்*
- *மாணவர்களின் நன்மைகருதி இப்பயிற்சியானது 27.05.2003, 3.6.2003 ஆகிய திகதிகளில் காலை 10.30 மணிக்கு இரு பிரிவுகளாக ஆரம்பமாகின்றன.*
- *மாணவர்களே இவ்வரிய சந்தர்ப்பத்தினை தவற விடாதீர்கள். இன்றே எம்முடன் இணைந்து உங்களின் எதிர்காலத்தை பயனுள்ளதாக மாற்றுங்கள்.*

*இயக்குனர், வாழ்வுதயம்*


## முக்கிய குறிப்பு
*குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகளை பின்வரும் முகவரிக்கு மட்டுமே அனுப்பவும்.*
பதிப்பாசிரியர்,
'மன்னா' பணியகம்,
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்.

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 12ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
செல்வி. றட்னா,
C11, மடுக்கோவில்,மடு.

*இரண்டாம் பரிசு*
ம. றொபினியா கூஞ்ஞ,
8ம் வட்டாரம்,
பேசாலை.

*மூன்றாம் பரிசு*
பி.தி.வேஜினி லெம்பேட்,
5ம் வட்டாரம்,
வங்காலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 238 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 235 பேர்

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்
1. A.A. அனிற்றா குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
2. பிரான்சீஸ் மஞ்சுளா, கன்னாட்டி, அடம்பன்.
3. A.றோபேட் பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
4. ஆர். றேமன் ஜோசப், கற்கிடந்தகுளம், முருங்கன்.
5. A.C. பிறேமலதா றோச், 5ம் வட்டாரம், பள்ளிமுனை, மன்னார்.
6. P. ஜெயந்தி, இல.27, சென்.பீற்றர்லேன், கு. வீதி, புத்தளம்.
7. ம. நிலூஜினி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
8. G. பிறைற்ரன் றோய், பாலைக்குளி, அடம்பன்.
9. டெ. செல்வி பாய்வா, 8ம் வட். அன்ரனீஸ் வீதி, பேசாலை.
10. அ. டோறா ஜெயலற் சோசை, 2ம் வட்டாரம், வங்காலை.
11. றெ.பி. மரியடினேசன், கங்காணிதீவு, நானாட்டான்.
12. A. நான்சி குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
13. அன்னம்மா (தீபா குலாஸ்), தாழ்வுபாடு, மன்னார்.
14. கி. அன்ரனீற்றா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
15. இராசநாயகம் பிரியதர்சினி, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
16. வினிதா, முருங்கன்பிட்டி, முருங்கன்.
17. E.B. விஜேந்திரன், மகாகல்கமுவ, கல்கமுவ.
18. ப. யோண்சி, திருக்குடும்ப கன்னியர்மடம், வங்காலை.
19. வி. கிறிஸ்ரீனா (மெறின்) பெரிய பண்டிவிரிச்சான்.
20. செ. நிதர்சன், சிறுத்தோப்பு, பேசாலை.
21. ஜெசிதரன் கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
22. R. ரவிறோச், பள்ளிமுனை, மன்னார்.
23. L. சுபாசினி சோசை, 2ம் வட்டாரம், வங்காலை.
24. இ. பற்றிசியா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
25. S. குமுதினி குரூஸ், முள்ளிக்குளம், தாழ்வுபாடு.
26. D. ஷியாந்திகா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
27. ஜெ. மெரியோன் டயஸ், த.ம. மேற்கு, தலைமன்னார்.
28. பு. ஜெனுக்ஷா, வ. முதலியார் குளம், றோ.க.த.க பாடசாலை
29. அ. டால்டன், வ. முதலியார் குளம். றோ.க.த.க.பாடசாலை.
30. ஜோ. மேரி மெற்றில்டா, 21 டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
31. தேவிகா பத்மராஜா, 'பெத்தனி' வயல்வீதி, மன்னார்
32. பீ. பெல்சியா லியோன், அரிப்பு, முருங்கன்.
33. அல்பேட் ஜீன், 8ம் வட்டாரம், பேசாலை.
34. J.C. சுவர்ணா, வஞ்சியன்குளம், வங்காலை.
35. செ. அனுஷா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
36. செல்வநாயகம், உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
37. தே. அனற் ஜெலிந்திரா, கன்னாட்டி, அடம்பன்.
38. சகாயசிறி, தலைமன்னார் ஸ்டேசன், தலைமன்னார்.
39. கி. பிரான்சிஸ் டபரேரா, இல.24, பெரியதம்பனை, வவுனியா.
40. அன்ரன் மெசியாஸ், ORSC அலுவலகம், தட்சணாமருதமடு.
41. A. பெனான்டோ C/O நளினி, ஓலைத்தொடுவாய், கரிசல்.
43. திருமதி. ஜீவரெட்ணம் யசிந்தா, மேரிஸ்வீதி, விடத்தல்தீவு
44. S. நிர்மலா லோகு, சாவற்கட்டு, மன்னார்.
45. பற்றிக் பிரசாத், சிதம்பர புரம், வவுனியா.
46. அ. தர்சன் சம்பாய்வா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
47. செல்வி. ராணி அரசரத்தினம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
48. யோ.மேரிடினோஜினி, மறைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.
49. அ. பெனட் குருஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
50. யே. இதயராஜ், முருங்கன்பிட்டி, முருங்கன்.

## *விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி -- இல 12*
*(புனித பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகம்)*
## சரியான விடைகள்

### இடமிருந்து வலம்
1. ஞானத்தோடு (4:5)
3. அவரோடு (2:6)
5. நிறைவு (2:10)
9. இருளின் (1:13)
12. உழைப்பால் (2:2)
13. உடலாகிய (1:24)
15. அத்திட்டம் (1:26)
16. திருத்தொண்டன் (1:25)
17. எதிர்நோக்கை (1:23)

### மேலிருந்து கீழ்
1. ஞானத்தோடு (3:9)
2. கட்புலனாகாத (1:15)
7. உழைக்கும் (1:7)
10. மகிழ்ச்சி (1:24)
11. மாட்சி (1:27)
14. ஒழித்து (2:14)

### வலமிருந்து இடம்
2. களைந்துவிட்டு(3:9)
4. செல்வங்கள் (2:3)
6. மனிதக் (2:11)
8. ஒன்றாக (2:2)
10. மரபுகளையும் (2:8)
18. இடம் (2:18)

### கீழிலிருந்து மேல்
7. உங்களை (2:4)
8. ஒருவரோடு (3:9)
10. மன்னித்தது (3:13)
15. அடக்கம் (2:12)
17. எதிர்நோக்கு (1:5)
18. இகழ்(ச்)சி (2:15)
19. ஊட்டம் (2:19)

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 13ற்கான முடிவுகளை ஜுலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

## பழைய பைபிளின் விலை என்ன?

உலகில் முதன் முதலாக கூட்டன்பெர்க் என்பவரால்தான் பைபின் அச்சடிக்கப்பட்டது. அன்று 200 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. இந்த பைபிளைப்போல் இன்றுவரை எந்த திருவிவிலியமும் அழகாக அச்சடிக்கப்பட வில்லையாம். இந்த பைபிளின் 21 பிரதிகள் மட்டுமே இன்று உள்ளன. அதன் ஒவ்வொரு பக்கமும் இன்று பத்தாயிரம் டொலர்கள் மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## கருதினால் குழுவின் புதிய தலைவர்

கருதினால் குழுவின் புதிய தலைவராக கருதினால் ஜோசவ் ரட்சிங்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். துணைத் தலைவராக வத்திக்கான் செயலர் அஞ்சலோ சொடானோ தெரிவாகியிருக்கிறார். கருதினால்மாரது கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல், திருத்தந்தையின் மரணம் பற்றிய தகவல் விபரங்களை மற்றைய கருதினால்மாருக்கு அறிவித்தல், புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துதல் என்பன இவரின் பணிகளாகும்.

## ஈராக் கிறிஸ்தவர்களின் நிலை என்ன?

சதாம் குசேனின் அரசு கவிழ்ந்தபின் ஈராக் கிறிஸ்தவர்கள் எதிர்காலத்தில் முஸ்லிம் அடிப்படைவாதம் உருவாகலாம் என்ற கவலையுடன் இருக்கிறார்கள் என எட்டு லட்சம் கிறிஸ்தவ மக்களின் பிரதிநிதியான பேராயர் ஸ்லெய்மான் தெரிவித்துள்ளார். பக்தாத்தை ஆட்கொண்டுள்ள அமெரிக்க படையினர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தபடியால் முஸ்லிம் கிறிஸ்தவ மத முரண்பாடுகள் அதிகரிக்க வாய்ப்புக்கள் இருப்பதாக கருதப்படுகிறது.

பக்தாத் கைப்பற்றப்பட்டபின் நகரிலுள்ள அனைத்து இடங்களும் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டபோது நகரின் மத்தியிலுள்ள புனித இறபாயெல் கத்தோலிக்க வைத்தியசாலைக்குள் கொள்ளையர் எவரும் புகவில்லையென இதற்கு பொறுப்பான பிரான்சிஸ்கன் சபை கன்னியாஸ்திரி தெரிவித்தார். யுத்த நேரத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த வைத்தியசாலை ஆற்றிய சேவையே கொள்ளையர்கள் இதனை அணுகாமல் இருந்ததற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மடுவில் தேசிய இளைஞர் ஒன்றுகூடல்

28வது தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய ஒன்று கூடல் 06. 06. 2003 அன்று மடுவில் மாலை 7.00 மணியளவில் மன்னார் ஆயர் மற்றும் தே.க.இ. ஒன்றிய இயக்குனர் அருட்பணியாளர் மேரியஸ் ஆகியோரின் தலைமையில் ஆரம்பமானது. இந்த ஒன்று கூடலில் கொழும்பு, கண்டி, சிலாபம், அனுராதபுரம், பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து 7 அருட்சகோதரர்களும் 3 அருட்சகோதரிகளும் 45 இளைஞர்களும் 25 யுவதிகளும் கலந்துகொண்டார்கள். இந்த ஒன்றுகூடல் 3 தினங்கள் நடைபெற்றது. பல கலாச்சார நிகழ்வுகளும், பாடல்களும் நட்பு ரீதியான விளையாட்டுக்களும் நடைபெற்றன.

## சிறிய குருமடத்தில் பெந்தகோஸ்தே அநுபவம

7.06.2003 அன்று பெந்தகோஸ்தே திருவிழாவுக்கு முதல் நாள் சனிக்கிழமை இரவு பெந்தகோஸ்து அநுபவத்தை பெறுவதற்கான திருவிழிப்பு வழிபாடு மன்னார் சிறிய குருமடத்தில் இடம்பெற்றது. குருமட அதிபர் அருட்தந்தை எஸ்.கே. தேவராஜ் அடிகளாரினால் ஆவியானவருடைய செயற்பாட்டை பற்றி மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அதேபோல அருட்சகோதரர் லக்ஸ்ரன் அவர்களும் ஆவியின் வல்லமையை பற்றி எடுத்து கூறினார். பின் தொடர்ந்து பாடல்களைப் பாடியும் ஜெபித்தும் மாணவர்கள் இறை அனுபவத்திற்குள் கடந்து சென்றனர். இவ்வாறு இரவு 12.00 மணியளவு மட்டும் இந்த ஆவியானவரைப் பெறுவதற்கான திருவிழிப்பு வழிபாடு நடந்தது. மாணவர்கள் அனைவரும் பெந்தேகோஸ்தே அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

திருத்தந்தையின் புதிய திருமடல்

# நற்கருணையின் திருச்சபை

### தன் சொந்த வாழ்வில் நற்கருணை பெற்றுக்கொண்ட முக்கியத்துவத்தை திருத்தந்தை விளக்குகிறார்!



வருடாவருடம் பெரிய வியாழன், குருத்துவ ஸ்தாபகத்தின் நினைவாக திருத்தந்தை தனது சிறப்புச் செய்தியை குருக்களுக்கு வழங்குவது வழமை. இவ் வருடம் திருத்தந்தையாக தனது பணிவாழ்வின் 25வது வருட நிறைவில் நற்கருணைக்கும் திருச்சபைக்குமுள்ள ஆழமான உறவை மையமாக வைத்து விசேட திருமடலை நற்கருணையின் திருச்சபை என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் 14 ஆவது சுற்றுமடல் இதுவாகும். தமது சொந்த வாழ்வில் நற்கருணை பெற்றுக்கொண்ட முக்கியத்துவத்தை இத் திருமடலில் திருத்தந்தை தெளிவாக கோடிட்டு காட்டியுள்ளார். உலகின் மூலை முடுக்கெல்லாம் தான் திருப்பலி நிறைவேற்ற தனக்கு கிடைத்த சந்தர்ப்பமே நற்கருணையின் பூகோளத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இம்மடலில் திருச்சபையின் மையமாகவும் உச்சமாகவும் எவ்வாறு நற்கருணை விளங்குகிறது எனவும் எமது விசுவாசத்தின் மறைபொருளாகவும் திருச்சபைக்கு ஆண்டவரால் கொடுககபபட்ட கொடையாகவும் நற்கருணை எவ்வாறு அமைகிறது எனவும் திருத்தந்தை சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## திருமறைக்கலாமன்றத்தின் சமாதான நிகழ்வில் மன்னார்க் கலைஞர்கள்

திருமறைக்கலா மன்றத்தின் படைப்புக்களில் அண்மையில் யாழ் மண்ணில் ஓர் இனிய நிகழ்வு இடம்பெற்றது. கடந்த மே மாதம் 14,15,16ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் திருமறைக்கலா மன்றம் நடாத்திய பல்லினக் கலைஞர்கள் கலந்துகொண்ட "அமைதிக்கான நிகழ்வுகள்" என்ற கலைவிழா இடம்பெற்றது. இதில் மன்னார் திருமறைக்கலா மன்றத்திலிருந்து பள்ளிமுனை, தலைமன்னார், படப்படி, பேசாலை, தாழ்வுபாடு, வங்காலை, முருங்கன் போன்ற பிரதேசங்களைச் சார்ந்த சுமார் 94 மன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்தனர்.

மேற்கூறிய 3 நாட்களும் வெவ்வேறு நிகழ்வுகளோடு இவர்கள் இணைந்திருந்தனர். முதல் நாள் கலை விழா என்கிற அமர்வும் இரண்டாம் நாள் சிறுவர் சமாதானப் பாசறை என்ற அமர்வும் மூன்றாம் நாள் திருமறைக்கலா மன்ற மாநாடு என்கின்ற அமர்வும் இடம்பெற்றது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)




.கடந்த 11. 05. 2003 அன்று தலைமன்னாரில் இடம்பெற்ற போதைப்பொருள் பாவனை ஒழிப்பும், யுத்தநிறுத்த ஒப்பந்தமும் என்ற கருத்தரங்கில் அருட்பணியாளர் அடைக்கலநாஜா உரையாற்றுகின்றார். மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. என் ஜெயபாலசிங்கம் நன்றியுரை ஆற்றுகின்றார்.

## கடவுளையும் மனிதனையும் இணைக்கும் இசை



திருவழிபாட்டில் இசைக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறும் இசையின் தரத்தை மேம்படுத்துமாறும் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை. வத்திக்கானில் கூடிய 10 ஆயிரம் பேர் மத்தியில் உரையாற்றிய திருத்தந்தை வழிபாட்டில் செபிப்பதற்கு இசை எந்தளவு உதவுகின்றது என்பதையும் வழிபாட்டை இசை எந்தளவுக்கு அழகுபடுத்துகின்றது என்பதையும் கண்டுணர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். ஆயினும் இந்த வழிபாட்டு இசை நம்மை செபிக்க, இறைவனோடு ஒன்றித்திருக்க உதவுகின்றதா? என்பதை ஆன்ம பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமென்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார். இசையானது மண்ணக ஆலயத்தையும் முடிவில்லாத விண்ணக ஆலயத்தையும் இணைக்கின்றதென்றும் கடவுளையும் மனிதனையும் இணைக்கின்றது என்றும் கூறினார். மேலும் நமது வழிபாடுகளையும், வழிபாட்டுப்பாடல்களையும், இசையையும் தூய்மைப் படுத்தவேண்டுமென்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

## பெத்லேகேமை தனிமைப்படுத்துவதா?

ஒரு சுவர் மூலம் பெத்லகேம் நகரை எருசலேமிலிருந்தும் ஏனைய பாலஸ்தீன பகுதிகளிலிருந்தும் தனிமைப்படுத்தும் இஸ்ரயேல் இராணுவத்தின் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டுமென சர்வதேச நாடுகளுக்கு விண்ணப்பித்துள்ளார் எருசலேம் பிதாப்பிதா மிஷல் சாபா. சுதந்திரமாகச் சென்று செபித்து அமைதியில் வாழ வழிகோலும் கிறிஸ்து பிறப்பு புனித நகரான பெத்லேகம் சுவர்களால் சுற்றிவளைக்கப்படாமல் இருக்க ஒவ்வொரு நாடும் தங்கள் அரசு மூலமும், இஸ்ரயேல் தூதரகம் மூலமும் முயல வேண்டுமெனவும் விண்ணப்பித்துள்ளார் பேராயர்.

## கட்டாரில் ஆலயங்கள் கட்ட அனுமதி

அரபு வளைகுடாவில் கட்டார் நாட்டில் கிறிஸ்தவ ஆல்யங்களைக் கட்டுவதற்கு அனுமதியையும் இடத்தையும் வழங்க அந்நாட்டு அரசு முன்வந்துள்ளது . வழிபாட்டு சுதந்திரத்தை மதிக்கும் கட்டார் நாட்டின் எண்ணப்போக்கிற்கு ஏற்ற வகையில் இவ் அனுமதியை வழங்க பஞ்சாயத்து விவகாரங்களுக்கான அமைச்சகம் முன்வந்துள்ளதாக அரச அதிகாரி ஒருவர் கூறினார். கடந்த நவம்பர் மாதம் 4ம் திகதி கட்டார் நாட்டிற்கும் வத்திக்கானுக்கும் இடையிலான முழு அரசியல் உறவு உருவாக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. சவுதி அரேபியாவின் அருகிலுள்ள கட்டார் நாட்டின் 8 இலட்சம் மக்கள் தொகையில் இலங்கை, ஈரான், பாக்கிஸ்தான், இந்தியா மற்றும் பிலிப்பைன்சிலிருந்து வந்து பணிபுரிபவர்களும் அடங்குவர். இங்கு வந்து பணிபுரிபவர்களில் 45 ஆயிரம் பேர் கத்தோலிக்கர்கள் 10 ஆயிரம் ஆத்தரட்ஸ் கிறிஸ்தவர்கள்.

## சுவரொட்டிப் போட்டி முடிவுகள

செடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் வாழ்வுதயம் சென்ற ஆண்டில் நடாத்திய சமாதானம் பற்றிய சுவரொட்டிப் போட்டியில் சிறப்பிடங்களைப் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவி செல்வி. கஜானி சிவதாசன் முதலாம் பரிசினையும் வவு/விபுலானந்தா மகாவித்தியாலயத்தினைச் சேர்ந்த மாணவன் செல்வன். மதன்றாஜ் இரண்டாம் பரிசினையும மன். புனித சவேரியார் பெண்கள் பாடசாலை மாணவி செல்வி. பெ. டிலிசா மூன்றாம் பரிசினையும் பெற்றுக்கொண்டார். மேலும் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

## முதல்கனிகளின் முதல்திருப்பலி

23.05.2003 அன்று மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் முதற் கனிகளான அருட்பணியாளர்கள் சுரேந்திரன், அன்ரன், மெரிடிகோல், சத்தியராஜ், ஜெயசீலன் ஆகியோர் தமது முதல் திருப்பலியை சிறிய குருமடத்தில் ஒப்புகொடுத்தனர்.

அன்றைய நாளில் மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவான அருட்தந்தை J.P.தேவராஜா அடிகளாரும், குருமட அதிபரும், ஏனைய மறைமாவட்ட குருக்களும், அமலமரிதியாகிகள் சபை துறவிகளும், நவசந்நியாசன அருட் சகோதரர்களும், புதிய குருக்களின் கல்வி பருவத்தில் உடன் உழைப்பாளிகளாகவும், அறிவுரைகளையும் வழங்கிய ஆசிரியர் குழாமும் ஒன்றிணைந்து நன்றித் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து உறவினை இரட்டிப்பதற்கும், மகிழ்ச்சியினை வெளிப்படுத்தவும் இராபோசனம் இடமபெற்றது. முதற்கனிகளான குருக்களை மகிழ்விக்கும் வண்ணம் மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட சில கலைநிகழ்வுகளும், நவசந்நியாசன அருட்சகோதரர்களினது சிறப்பு நிகழ்சியும், இடையிடையே அருட் தந்தையர்களின் உரைகளும் இடம்பெற்றன. சிறிய குருமட மாணவர்களுக்கு இந்நிகழ்வு ஒரு உத்வேகத்தைக் கொடுப்பதாக அமைந்திருந்தது. தாமும் இவர்களைபோல் ஒரு நாள் பணிக் குருத்துவத்தில் நுழைய வேண்டும் என்ற ஆசையை ஏற்படுத்தும் நிகழ்வாக இது அமைந்திருந்தது.

சிறிய குருமட மாணவர் சார்பில்
சகோதரன் அன்ரனி சொய்சா

இப்பத்திரிகை தலைமன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு [illegible]சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org